# காசிஆனந்தன் கவிதைகள்



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010




1450/MAY 2010
http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# காசி ஆனந்தன் கவிதைகள்

○

இரண்டாம் தொகுதி



விடுதலைக் குயில்கள்
வெளியீடு

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

**காசி ஆனந்தன் கவிதைகள்**
இரண்டாம் தொகுதி

○

உரிமை–காசி ஆனந்தன்

○

முதல் அச்சு-டிசம்பர், 1990

○

வெளியீடு :
**விடுதலைக்குயில்கள் பதிப்பகம்**
33, திருவள்ளுவர் நகர்
இராமநாதபுரம்
கோயமுத்தூர்-45.

○

அச்சு :
**தமிழோசை அச்சகம்**
34, அபிபுல்லா சாலை
தியாகராயநகர்
சென்னை-600017

○

பக்கம் : 164 + 20

**விலை : இருபது ரூபாய்**

**காணிக்கை**

○

தமிழீழத்தின் வரைபடத்தை முதன் முதலாக உருவாக்கியவரும்; தமிழீழ விடுதலைக் கவிஞர் காசி ஆனந்தன் கவிதைகளை 'உயிர் தமிழுக்கு!' எனும் தலைப்பில் முதன்முதலாக வெளியிட்ட வருமான சி.பா. ஆதித்தனார் அவர்களுக்கு...

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

□ □ □ நன்றி

- கவிஞர் இன்குலாப்
- கிள்ளிவளவன்—ஆண்டாள்
- தோழன்
- பழநிபாரதி
- திருநாவுக்கரசு
- அச்சகப் பணியாளர்கள்
- இரத்தினம் ஆப்செட்

நன்றி □ □ □

# பதிப்புரை

பாரதி, தன் 'சுய சரிதை'யில், 'மங்களம்சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்' ஒரு யாழ்ப் பாணத்துச் சாமியைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அந்தச் சாமி, பாரதியைப் பாதித்திருக்கிறான். பாரதியின் தாக்கங்கள் பாரதிதாசனிடம் இருந்தன. பாரதிதாசனின் கடைசி மாணவனாக நம் காசி ஆனந்தன் நிற்கிறார். ஆக, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், ஈழத்தில் தொடங்கிய ஒரு வீச்சு, இந்நூற்றாண்டின் இறுதியில், மீண்டும் ஈழத்திலேயே போய் முடிந்திருக்கிறது. அப்போது ஈழத்துச்சாமி; இப்போது ஈழத்துக் காசி!

இந்நூல் இரண்டு செய்திகளை உறுதிப்படுத்து கிறது.

பாரதிதாசனின் மாணவன் எவனும் சோடை போனதில்லை என்பது ஒன்று, இயந்திரத் துப்பாக் கியை ஏந்திய சமூகமும் கூட, எழுதுகோலை எறிந்து விட முடியாது என்பது இன்னொன்று.

பாரதிதாசன் நூற்றாண்டில் இந்நூலை வெளி யிடும் பெருமையை விடுதலைக் குயில்களுக்குக் கொடுத்த கவிஞர் காசி ஆனந்தனுக்கு நன்றி!

அமைப்பாளர்
'விடுதலைக் குயில்கள்'

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

**விழித்தெழ வேண்டிய வேளை இது**

○

**இன்குலாப்**

ஈழவிடுதலைப் போருக்கு இத்தொகுப்பு ஓர் 'இலக்கிய சாட்சி'யாகும். கவிஞர் காசி ஆனந்தன் ஒரு போராளியாகவும் இருக்கின்றமையால், அவரது போர் அனுபவம் ஒரு கலை வடிவமாகவும் வெளிப்பட்டிருக்கிறது. ஈழ விடுதலைப் போரில் துப்பாக்கிகள் புகைந்த பொழுதுகளில், அவரது பேனாவின் முனையும் கசிந்தது. அதனால் அந்தப் போரின் குருதியும் கண்ணீரும் இந்த எழுத்துக்களில் உறைந்துள்ளன.



ஈழ விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சரியான தலைமையை நான் மிகவும் தாமதமாகத்தான் புரிந்து கொண்டேன். கவிஞர் காசி ஆனந்தனின் இலக்கியப் பங்களிப்பையும் தாமதமாகவே புரிந்து கொண்டேன். எனது தாமதங்களால் புலிகளுக்கோ கவிஞர் காசி ஆனந்தனுக்கோ இழப்பு ஏதுமில்லை. ஆனால் எனது தாமதங்கள் இன்னும் நீடித்திருந்தால் நான்தான் முழுமையாக இழந்தவனாகி இருப்பேன். என் கண் முன்னால் நடைபெறும் ஒரு விடுதலைப் போரை அடையாளங் காணத் தவறிய குற்றவாளியாக நின்றிருப்பேன். தாமதமானாலும் சரியான இடத்தை வந்தடைந்து விட்டதற்காக என்னையே நான் தேற்றிக்கொள்கிறேன். நீங்களும் இந்த இடத்தை வந்தடைய வேண்டும் என்ற நோக்கிலேயே இதை எழுதுகிறேன்

தமிழீழம் என்ற உண்மைக்கு முதல் இலக்கிய வித்திட்டவராகக் காசி ஆனந்தன்தான் இருப்பார். என்று நம்புகிறேன். எனக்குத் தெரிய அவர் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து தமிழீழத்தின் விடுதலைக்காகத்தான் எழுதி வருகிறார். இன்று அவர் கண் முன்பே அவர் கவியுலகில் கண்ட கனவு நினைவாகிக் கொண்டிருக்கிறது. 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்று பாடிய பாரதியைத் தீர்க்கதரிசி என்று இன்று பாராட்டுகிறார்கள். ஆனால் என்னைப் பொருத்தமட்டிலும் பாரதியின் விடுதலைக் கனவு இன்னும் நனவாகவில்லை என்றே கூறுவேன். விடுதலை பெற்ற நாட்டுக்குரிய எந்த இலக்கணமும் இன்று இந்தியாவுக்கு பொருந்தவில்லை. இன்றைய இந்திய விடுதலை என்பது ஆண்டைகளுக்கு, அதிகாரிகளுக்கு, முதலாளிகளுக்கு உரிய விடுதலைதானே தவிர அது மக்கள் விடுதலை அன்று.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

காசி ஆனந்தன் என்ற கவிஞரோ தான் விதைத்த கனவு நிறைவேறும் தருணத்தில் நிற்கிறார். அதை அவர் இருந்து கண்டு மகிழ்ந்து பாட வேண்டும் என்பது என் விருப்பம்; என் வாழ்த்து. ஒரு வேளை அதற்கு முன்பே ஒரு போராளியின் வீர முடிவை அவரும் எய்துவாரேயாயின் அவர் உதடுகளில் ஒரு நம்பிக்கையான புன்னகை இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஏனெனில் அவர் வரித்துக் கொண்ட வாழ்க்கை அத்தகையது.

இன்றையத் தமிழ்க்கவிஞர் பலருக்கு உலகக் கொடுமைகளையெல்லாம் எதிர்க்கும் நெஞ்சுரம் உள்ளது. ஆனால் தங்கள் கண்முன்பு நடைபெறும் கொடுமைகளை எதிர்ப்பதில்தான் தயக்கம் இருக்கிறது. சில சமயம் இந்திய அரசு ஒப்புக்கொள்ளும் எல்லை வரைதான் அவர்கள் எதிர்ப்புணர்ச்சி நீளகிறது. தங்கள் எதிர்ப்புணர்ச்சிக்கு இந்திய அரசின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கிறார்களோ என்னவோ? ஆனால் கவிஞர் காசி ஆனந்தனின் எதிர்ப்பு அதிகாரத்திலிருப்பவர்களின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் எதிர்ப்பன்று. அது அதிகாரத்தையே தரைமட்டமாக்கும் எதிர்ப்பு. அவரது எதிர்ப்பு மானுடத்தின் இயற்கை நீதிக்கான கோரிக்கை; போராட்டம்.

ஸ்ரீலங்கா அரசு கவிஞர் காசி ஆனந்தனை சிறையிலடைத்தது. அரசியல் தலைவர் சிலருக்குக் கிடைக்கும் மேல் வகுப்பு வசதி கொண்ட சிறைகள் அல்ல அவருக்கு வாய்த்த சிறைகள். அதைக் கவிஞரே பாடுகிறார்.

நீள நெடுமதில்
சூழ இருட்சிறை
நெருப்பில் கிடக்கின்றேன்
ஈழ எழில்நிலம்
வாழக் கொடுஞ்சாவின்



இடுக்கில் நடக்கின்றேன்
சின்னத் துளைவழி
மின்னல் ஒளிவரச்
சிந்தை துடிக்கின்றேன்
என்னைச் சிறைகொள்ளும்
மண்ணைச் சினந்துநான்
இடியாய் வெடிக்கின்றேன்

பாயும் படுக்கையும்
நோயும் நொடிகளும்
பார்க்குதடா மேனி
போயும் போயும்உயிர்
மேயும் சிறைக்கிந்தப்
புலவனொடா தீனி?

இந்த வரிகளைப் படிக்கும் பொழுது வியத்நாமிய தலைவர், தோழர் ஹோசிமின் எழுதிய 'சிறைக் குறிப்பு'க் கவிதைகள்தாம் என் நினைக்கு வந்தன. அவர்கள் அனுமதித்த நேரங்களில் 'வெளிக்கு' வருவதில்லை. 'வெளிக்கு' வரும் நேரங்களில் அவர்கள் அனுமதிப்பதில்லை என்று அன்றாடக் 'காலைக் கடன்'களைக் கழிப்பதில் ஏற்படும் சிக்கல்களை ஹோசிமின் எழுதினார்.

ஈழப் போராளிகள் எதிர்கொண்ட சிறை அனுபவங்கள் மிகவும் கொடுமையானது. சிங்களப் பேரினவாத அரசு, தனது பயங்கர வாதத்தின் மீது மட்டுமே நம்பிக்கை வைத்து. விடுதலைக்குப் போராடிய இளந்தளிர்களைப் பொசுக்கியது. அந்தக் கொடுமைகளை எதிர்கொண்டு மீண்டவர்களும், மாண்டவர்களும் மானுடத்தின் கண்ணியத்தை உயர்த்திய மாமனிதர்களாய் வரலாற்றில் நின்று கொண்டிருப்பார்கள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

காசி ஆனந்தனை அவர் குடும்பத்தின் தலை மகன் என்று கருதுகிறேன். அவர் காட்டிய வழியை அவரது தம்பியும் தங்கையும் எற்றுக் கொண்டார்கள். தங்கை சிவமலர், அரசின் ஏவல் நாய்களால் கடித்துக் குதறப்பட்டதை அவர் கவிதையாகப் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

தங்கை மலரை
　　தனிமைச் சிறையில்
எங்கோ கொடியர்
　　இருத்தினார்களாம்
கீழே நிலத்தில்
　　கிடத்தி செருப்பால்
மேலே மிதிக்க
　　மேனி துடித்ததாம்
அன்புத் தங்கையின்
　　ஆவிபிழைக்கும்!
என்பது கூட
　　நம்புதற்கிலையாம்

என்று அவர் தமது துயரத்தை முற்றுப் பெறாத தொனியிலேயே நிறுத்தி வைக்கிறார். அது போலவே தம்பி ஜெயத்துக்கும் ஒரு கவிதையைக் காணிக்கையாக்கியுள்ளார். மட்டக்களப்பு தாளங்குடாவில் எதிரிகள் (இந்தியப்படைகள்) முற்றுகையில் நஞ்சை உண்டு வீரச்சாவு பெற்றவர் கவிஞரின் தம்பி சிவஜெயம்.

அட என்தம்பி
　　அண்ணனை மறந்தா
இடம்நீ பெயர்ந்தாய்
　　எப்படி முடிந்தது?
மண்ணுக் காய் நீ
　　மடிந்த சாவினை
எண்ணி மகிழ்கிறேன்
　　இருந்தும் அழுகிறேன்...



என்ற வரிகளின் சோகம் நமது இதயத்தையும் கவ்வுகிறது. அடுத்த கவிதையைப் படிக்க முடியவில்லை. கண்ணெல்லாம் நீரால் சுமக்கிறது.

வெறும் பேனா வீரராகக் கவிஞரை எதிரிகள் ஒரு போதும் கணித்ததில்லை. அவரது எழுத்துக்கள் தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு கண்ணிலும் பொறியாகச் சுடர்வதை அவர்கள் கண்டுணர்ந்தார்கள். விடுதலைப் புலிகள் 'புலிகளின் தாகம் சுதந்திர தமிழீழம்' என்று சாவின் விளிம்பில் நின்ற தருணங்களிலும் முழங்குவது, எதிரிகளின் செவிப்பாறைகளில் இடியாக இறங்குகிறது. இந்த முழக்கத்தைத் தந்தவன் யார்? என்று அஞ்சித் தேடியபொழுது, அங்கு காசி ஆனந்தன் மண்ணுக்கும் விண்ணுக்கும் வடிவெடுத்து நிற்பதைக் கண்டார்கள். இந்த முழக்கம் ஈழ மக்களின் நெஞ்சங்களில் துடித்துக் கொண்டிருந்தது, அது காசி ஆனந்தனின் உதடுகளில் வெளிப்பட்டது. மக்களை அடக்க நினைக்கும் ஒவ்வொரு எதிரியும், தன்னை எதிர்ப்பவனைத் தனிமனிதனாகத்தான் பார்க்கிறான். அவன் வீழும் பொழுதுதான் அவனுக்குத் தெரிகிறது, தன்னை மிதிப்பது ஒரு ஜோடிக் கால்கள் அல்ல ஒரு கோடிக் கால்கள் என்று.

காசி ஆனந்தனுடைய தலைக்குச் சிங்கள அரசு ஒரு விலை வைத்தது. ரூ, 25,000. அதைக் கவிஞர் எப்படி எதிர் கொண்டார்?

இனிது விடுதலை இனிதென்று ரைத்தால்
　　என்தலைக்குநீர் விலைவைத்தீர்
அச்சம் இலாத என் தமிழர் குருதியின்
　　அணுவில் உள்ளது விடுதலை!
பிச்சை விலை எவன் குறித்தான்? தலை
　　பிடுங்க, நினைத்தவன் எவனடா?

மீண்டும் ஒரு முழக்கந்தான் இந்தக் கவிஞரிமி இருந்து புறப்பட்டது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தேனிசை செல்லப்பாவின் தெளிவான, இனிய குரலில் கவிஞரின் பாடல் வரிகள் கலக்கும் பொழுது விடுதலையை அவாவும் ஒவ்வொரு நெஞ்சமும் உணர்வு பெறுகிறது.

எங்கள் தோழர்களின் புதை குழியில்
மண்போட்டுச் செல்கிறோம்
தோழர் நினைவில் மீண்டும் தோளில்
துப்பாக்கிகளை அணைக்கின்றோம்

என்று தேனிசை செல்லப்பா பாடும் பொழுது, துயரத்தின் கனத்தை மட்டுமல்ல; நம்பிக்கையின் நெருக்கத்தையும் உணர முடிகிறது.

'அடைக்கலம் தந்த வீடுகளே' என்ற கவிஞரின் பாடல் மனித மனித உறவுகளின் மேன்மையைப் பாடுகிறது.

'எங்கள் உடலில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா? நங்கள்
தங்கி இருந்தநாள் சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா?

என்ற வரிகளைக் கேட்கும் எந்த ஒரு தமிழ் நெஞ்மும் விடுதலைப் புலிகளை தனது பிள்ளைகளாய் இறுதிவரை வைத்துப் பேணவே முன் வரும். அப்படி ஒரு பிணைப்பை ஏற்படுத்தும் சக்தி இந்தப் பாடலுக்கு உண்டு. உண்மையில் மக்களை நேசிக்கும் நெஞ்சிலிருந்துதான் இத்தகைய சொற்கள் பீறிட முடியும்.

திலீபன், பண்டிதர், ஐங்கரன், பரமதேவா இன்னும் நினைவைவிட்டு நீங்காத போராளிகள் அனைவரும் இவரது கவிதைவரிகளில் உயிர்த்திருக்கிறார்கள்.



'தமிழீழம்' என்ற தலைப்பில் கவிஞர் எழுதியுள்ள விருத்தங்கள், தமிழீழத்தின் இயற்கை அமைப்பு, தமிழ் மக்களின் உயர்பண்புகள், அமைய இருக்கும் தமிழீழத்தின் உன்னத நிலை போன்றவற்றைத் தெளிவாகச் சித்தரிக்கின்றன. அது சமத்துவமுடைய தமிழீழமாக நிற்கும் என்பதை

ஆணும் பெண்ணும் சமன் என்பதால்
அடுப்போரம்ஆணும் நிற்பான்!
பூணும் வீரம் பொது என்பதால்
களப் போரில் பெண்ணும் நிற்பாள்!
வேலிக்குள் பெண்வாழ ஆடவன்
வெளிவாழும் நிலை இங்கில்லை !
கூலிக்கு வாழ்வார்போல்
விலைபேசி மணங்கொள்வார்
கொடுமை இல்லை!

என்று கண்முன் நிறுத்துகிறார்.

தமிழீழத்தின் எழுச்சி, போர், விடுதலை ஆகிய அனைத்தையும் கவிக்குரலாக இத்தொகுப்பு முழுவதும் கேட்கிறேன். இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகின் தென்முனையில் மானுட விடுதலைக்கான யுத்தம் ஒன்று நடைபெறுகிறது. இந்த மாபெரும் போரில் ஈடுபட்டுள்ளவர்கள், கொரில்லாப் போர் முறைக்கு வளமான அனுபவங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசின படைவலிமையை எதிர் கொண்டு திரும்பும் பொழுதே உலகின் நான்காவது பெரும்படையான இந்தியப் படைகளைச் சந்தித்தார்கள். கேவலம் இரண்டாயிரம் பொடியன்களால் என்ன செய்துவிட முடியும் என்று இந்திய அரசு கொக்கரித்தது. உலகின் எந்தப் பெரிய நாடும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

ஈழப்போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து கொள்ளவில்லை. யாசர் அராபத்தையும் நெல்சன் மண்டேலாவையும் ஆதரித்த அரசுகளுக்குத் தமிழீழ விடுதலைப் போருக்கும் அத்தகையதொரு வரலாற்று நியாயம் உண்டுஎன்ற உண்மை தெரியாமற்போனது. அந்த உண்மையை எடுத்துப் பேச வலிமையான அமைப்பும் ஏதும் தமிழர்க்கு இல்லை. இந்தியத் துணைக்கண்டத்தில், இனங்களின் எழுச்சிகளை ஒடுக்குவதில் முனைந்து நின்ற இந்திய அரசே, ஈழத் தமிழர்களின் புரவலனாக உலக நாடுகளின் முன்பு வேடம் போட்டது. உலகமும் இந்தப் போலிப் புரலவனின் பசப்பு மொழிகளையே செவிமடுத்தது. உலகின் பிற்போக்கு, மற்றும் முற்போக்கு அரசுகள் அனைத்தும், நிதி உதவியாலும் ஆயுத உதவியாலும் ஸ்ரீலங்காவின் ஒடுக்குமுறைக் கரங்களைப் பலப் படுத்தின.

இத்தனைக்கும் பிறகு இன்று ஈழப்போராட்டமும் வெற்றிநடை போடுகிறது. உலகின் எந்த விடுதலைப் போராட்டமும் எதிர்கொள்ளாத சோதனைகளையெல்லாம் புறங்கண்டு இன்று ஈழவிடுதலைப் போராட்டம் நடைபெறுகிறது. இத்தகையதொரு போராட்டத்தை நடத்த எஃகு நெஞ்சம் கொண்ட தலைமையும், விடுதலையை முழுமையாக ஏற்றுக் கொண்ட மக்களும் தேவை. அந்தத் தலைமையில் தமிழீழவிடுதலைப் புலிகள் நிற்கிறார்கள். தமிழீழ மக்கள் புலிகளைத் தாங்கு கிறார்கள்.

விடுதலைக்கு எதைத் தருவது என்பதில் இந்த இலக்கியம் தொடக்கம் முதற்கொண்டே தெளிவாக நின்றது. முதலாவதாகவும், இறுதியாகவும், தரத் தக்கது உயிர் என்பதில் அவர்கள் ஒருபோதும் ஐயங்



கொண்டதில்லை. அதனால் கழுத்தில் அவர்கள் நஞ்சுக் குப்பியணிந்தார்கள். அந்தச் செயல்முறை இன்றளவும் புரட்சியாளர்கள் மத்தியில் விவாதத்துக் குரிய ஒன்றாக இருந்து வருகிறது. முன்னாள் புரட்சி யாளர்களான இந்தியக் பொதுவுடைமைக் கட்சி யினர் (CPI) இதைக் கோழைத்தனம் என்றனர். அந்த இயக்கத்தின் புரட்சிகர முன்னோடிகளே நஞ்சுண்ட வரலாற்றை மறந்து இத்தகைய எள்ளலில் இறங்கினர்.

புலிகள் எதிரிகள் கையில் அகப்பட்ட சமயங் களில் நஞ்சுண்டு மாண்டது எதனால்? எதிரிகளின் சித்திரவதைகளுக்கு அஞ்சித் தங்கள் இயக்க உண்மையை வெளியிட்டு விடக்கூடும் என்ற பயத் தாலா? இல்லை. எதிரியிடம் பிடிபட்டவர்கள் உண்மையை வெளியிட மறுத்த சமயங்களில் எதிரிகளால் கொல்லப்பட்டார்கள் என்பதுதான் ஸ்ரீலங்காவில் நிகழ்ந்த உண்மை.

ஸ்ரீலங்கா அரசுப்படைகளிடம் அகப்பட நேர்ந்த புலிகள் உயிரினும் மேலான இயக்க உண்மைகளை மட்டும் அல்ல, தங்களின் உயிரைப் பறிக்கும் வாய்ப்பையும் எதிரிகளுக்குத் தர விரும்பவில்லை. விடுதலைக்குத்தரக் கூடியது உயிர்தான் என்பதில் தெளிவாக இருந்தார்கள். ஆயினும், கைதாகி ஆயுதம் இழந்து, எதிரி மகிழும் விதத்தில் தம் உயிர் போவதை அவர்கள் விரும்பவில்லை; எனவே அதைத் தாங்களே போக்கடித்துக் கொண்டார்கள். நஞ்சுக் குப்பியுடன் களத்தில் வீரமரணம் அல்லது விடுதலை என்ற தெளிவில் நிற்கிறார்கள். இது எத்தனை ஆயிரம் எதிரிகளையும் எதிர்கொள்ளும் மனோ திடத்தை வளர்க்கும். விடுதலைப் போரை நடத்த விரும்பும் எந்த இயக்கமும், பின்பற்றத்தக்கப்

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

புரட்சிகர நடைமுறை இது. ஈழப்புலிகள் கொரில்லா இயக்கங்களுக்கு வழங்கிய பயன்மிக்க அனுபவம் இது எனலாம்.

கையில் பேனாவும், கழுத்தில் நஞ்சு மாலையு மாய்க் கவிஞர் நிற்கிறார். இவரது வாழ்க்கை தமிழீழத்தின் விடுதலைப் போராட்ட வாழ்க்கையாக நிற்கிறது. இவரது இலக்கியம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாறாக இருக்கிறது. நெஞ்சில் கவிஞர் உண்மையை வரித்துக் கொண்ட காரணத் தால் எழுத்தெல்லாம் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. எதைச் சொல்வது என்பதில் மானுடத்தின் மகத்தான சாதனையாகிய விடுதலைப் போரைச் சொல்கிறார் எப்படிச் சொல்வது என்பதில் கவிதையாகச் சொல் கிறார். இத் தொகுப்பிலுள்ள கவிதை அழகைப் பற்றித் தனியாக எழுத வேண்டும். நெஞ்சில் உள்ள உண்மையை இசைக்க முனைவதால் இவர் குரல் எளிய சொற்களில் சக்தியுடன் ஒலிக்கிறது.

விழ விழ எழுவோம்...
விழ விழ எழுவோம்...
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!
விண்ணின் குண்டுகள்
வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள்
மறுபடி தழைத்தன !
நெடுங் கடற்கரையில்
நேற்றும் புலிகள்
சுடுங்குரல் கேட்டோம்
தோள் சிலிர்த்தது...

தமிழகத்தில் இந்நூல் வெளியிடப்படுவதன் முக்கியத்தைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தங்கள் கண் முன்பு தங்கள் இனம் விடுதலைக்குப்



போராடும் பொழுது, இயன்ற வகையில் எல்லாம் உதவ வேண்டியது தமிழர்களின் கடமை. இங்குக் கட்சிகளின் அரசியல் தட்பவெப்ப நிலைமைகளுக்கு ஏற்ப ஈழ விடுதலைப் போரின் ஆதரவு உயர்வதும் தணிவதும் வருந்தத்தக்கது. வங்க தேச விடுதலைப் போரில், தமிழகம் செய்த பங்களிப்பைத் தமிழீழ விடுதலைப் போருக்காகச் செய்யவில்லை என்பது தான் இன்றளவும் உண்மை.

தமிழினத்தின் துரோகிகள் இன்று இந்த விடுதலைப் போரையும், போரின் ஈட்டி முனை களாகிய புலிகளையும் கொச்சைப்படுத்தி வருகின்றனர். தமிழினம் எந்த வகையாலும் தலை நிமிர்ந்துவிடக் கூடாது என்பதில் இவர்கள் எங்கிருந் தாலும் ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் பரப்பும் பொய்மை வலைகளில் தமிழ்ச் சமுதாயம் சிக்குண்டு விடக்கூடாது. ஆனால் தமிழர்கள் சிக்குகிறார்கள். தமிழர்கள் இந்தப் பொய்மை வலைகளில் புகுவதற்கு வேறு சில காரணங்களும் உண்டு.

இன்றுள்ள அரசியல் சாசனத்தின் விளிம்பு களுக்குள், தமிழினம் உட்பட எந்த ஒரு தேசிய இனத்துக்கும் விடுதலை என்பது சாத்தியமில்லை இன்றையத் தலைமைகள் தேசிய இனவிடுதலை என்ற வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் மன நிலையில் இல்லை. இத்தலைமைகளால் வழி காட்டப்படும் தமிழ் மக்களும், இன்று தயங்கி நிற்கின்றனர்.

எதிரிகளின் பொய்ப் பிரசாரம், அவதூறு, தலைமைகளின் தடுமாற்றம், தமிழர்களின் தயக்கம் ஆகியவையே ஈழப் போராட்டத்திற்குத் தமிழகம் வழங்கக் கூடிய பங்களிப்புகளாக இன்று தொடர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கின்றன. ஆயினும் தமிழீழம் பல தடைக்கற்களைத் தகர்த்துத் தாண்டி முன்னேறி வருகிறது. தமிழகத்தவர் உதவினாலும் உதவாவிட்டாலும், தமிழீழம் மலர்வதை உலகின் எந்தச் சக்தியாலும் தடை செய்ய முடியாது. நாளைய விடுதலை பெற்ற தமிழீழ வரலாற்றில், விடுதலைக்குத் தடையாக நின்ற சக்திகளில், நம் பெயரும் குறிக்கப்படக் கூடாதல்லவா ? அதனால் இதை இப்பொழுது சொல்லி வைக்க வேண்டியது நமது கடமையாகிறது.

தமிழர்கள் தங்கள் தடுமாற்றங்களில் இருந்தும் தயக்கங்களில் இருந்தும் விடுபட வேண்டிய நேரமிது. காசி ஆனந்தனின் கவிதைத் தொகுப்பு தமிழகத்தில் வெளியிடப்படுவது, அவர்களை விடுவிக்க உதவும் என்று உறுதியாய் நம்புகிறேன்.

## முன்னுரை

○

என் நாட்டையும்
விடுதலை உணர்வையும்
ஒரு போதும் இழக்கமாட்டேன் என்றேன்.
இதனால்-
என் ஏட்டையும் எழுத்தையும்கூடப்
பலமுறை நான் இழந்தேன்.
அரசு வெறிப்படை வீட்டில் அடிக்கடி
பாய்ந்து என் படைப்புகளை அள்ளிச்
சென்றது.
காலமெலாம் எனக்குத் துணைநின்ற
நண்பர்கள் சிலர்-எதிரி கண்களுக்குத்
தப்பிய என் பாடல்கள் சிலவற்றைக்
காப்பாற்றினார்கள்.
இதோ-
பருந்துகளின் வாயில் சிக்காத பறவைக்
குஞ்சுகள் இத்தொகுப்பில்
சிறகு விரித்துப் பறக்கின்றன.
மகிழ்கிறேன்.

தமிழீழ விடுதலை தவிர்க்க முடியாததே.
உண்மை இதுதான்-
நெருப்பைத் தமிழீழத்தாய் கருப்பை
ஆக்கினாள்.
விடுதலை பிறக்கும்.

தமிழீழம்
1—11—1990

காசி ஆனந்தன்

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# போர் முரசு



தமிழீழ விடுதலைக் களத்திலும்
தமிழ்நாட்டிலும் 1980 - 90 க்கு
இடைப்பட்ட காலத்தில் கவிஞர்
பாடிய விடுதலைப் பாடல்கள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## மகனே !

○

குருதியால் ஒரு தமிழீழம்
கொண்டு வா மகனே !—உன்னைக்
கூண்டில் இட்டவன் பிணக்கோலம்
கண்டு வா மகனே !
கருவினால் நீ புலியடா !
குதித்து வா மகனே !—உன்றன்
கண்களில் நீர் வைத்தவனை
மிதித்து வா மகனே !



செந்தமிழ் மா வீரர் உடை
தாங்கி வா மகனே !—ஆடும்
செருக்களத்தில் தமிழ் மானம்
வாங்கி வா மகனே !
வந்து பாயும் குண்டிடை
நடந்து வா மகனே !—உன்னை
வளைத்து நின்ற கொடுந்தடை
கடந்து வா மகனே !

தோள் இரண்டில் வெம்புயல் நீ
தூக்கி வா மகனே !—உன்னை
துடிக்க வைத்த சிங்களத்தைத்
தாக்கி வா மகனே !
நாள் இரண்டில் விடுதலை
பறித்து வா மகனே !—உன்றன்
நலன் தடுப்பார் எலும்பினை
முறித்து வா மகனே !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## விழிப்பு
○

ஏடா ! சிங்களவா !
எத்தனை காலம்
எமை நீ அடித்தாய் ?
மூடாத் தமிழ் விழிகள்
மூட எந்தமிழர்
உயிர் நீ குடித்தாய் !
கூடா வெறி புரிந்தாய்...
குழந்தையைக் கூட நீ
கொன்று முடித்தாய் !
கேடா ! ஒன்று நீ கேள் !
கிளர்ந்ததடா நாடு !
பாடம் படித்தாய் !



நேற்றை ஈழத்திலே
நெஞ்சம் கொதித்தோம்...
எனினும் பொறுத்தோம் !
ஆற்றல் புதிது பெற்றோம் !
அட இன்று நாங்கள்
உயிரும் வெறுத்தோம் !
காற்றைப் புயல் செய்தோம் !
களத்தில் உன் வால்
முழத்தில் அறுத்தோம் !
வேற்று நிலத்தவனே !
விழித்தோம் ! அட கேள் !
இனி போர் நிறுத்தோம் !

புலிகள் படை இதடா !
பொங்கி எழுந்தது
தமிழீழ நாடு !
வலிமை கொண்டெழுந்தோம் !
வான் இடி ஆனோம்...
வந்ததுன் கேடு !
நலிவு தந்தவனே !
உடைந்து நொறுங்குது
பார் சிறைக் கூடு !
பலிநீ ஆவது மெய் !
படை திருப்படா...
நில்லாதே ஓடு ...!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## சாவே

○

சாவே ! என்னை உன் கையில் தருவேன்...
தமிழன் கையில் விடுதலை தா !
சாவே ! நின்னை இன்னுயிர் என்பேன்...!
தமிழீழம் உயிர்பெற நீ வா !

விலங்கு பூட்டிய அடிமை மண்ணில்
வீடும் வாழ்க்கையும் ஒரு கேடா ?
உளங் கலங்கி நடுங்கும் உள்ளம்
உடையார் நாடென் தாய்நாடா ?

மான மூச்சை மறந்துயிர் வாழும்
மனிதன் மூச்சும் ஒரு மூச்சா ?
ஏனோ வந்தேன்...ஏதோ வாழ்ந்தேன்...
என்பவன் பேச்சும் ஒரு பேச்சா ?

தமிழன் குருதி தண்ணீர் ஆனதா ?
தமிழன் வீரத் தோள் சாய்ந்ததா ?
தமிழன் வாழத் தன்னை அழிக்கும்
தமிழன் வாழ்ந்த நாள் ஓய்ந்ததா ?

சாவே ! என்னை உன் கையில் தருவேன் ..
தமிழன் கையில் விடுதலை தா !
சாவே ! நின்னை இன்னுயிர் என்பேன் !
தமிழீழம் உயிர் பெற நீ வா !



## சித்திரையே !

○

சித்திரைக் குயிலே ! உன்
பாட்டை ஏன் தோப்பில்
படிக்கிறாய் ?
எத்தனை கொடியதோர்
கல்லினால் என்னை
அடிக்கிறாய் ?

சித்திரை மலரே ! உன்
அழகை ஏன் மண்ணில்
தெளிக்கிறாய் ?
எத்தனை கூர் கொண்ட
முள்ளினால் என்னைக்
கிழிக்கிறாய் ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

சித்திரை நிலவே ! உன்
ஒளியை ஏன் வானில்
விரிக்கிறாய் ?
எத்தனை பொல்லாத
நெருப்பினால் என்னை
எரிக்கிறாய் ?

சித்திரையே ! ஓடிப்
போய்விடு ! நெஞ்சை
மிதிக்காதே !
எத்தனை பேர்செத்தார்
ஈழத்தில் துள்ளிக்
குதிக்காதே !



## சேதி

○

போர்ப் பயிற்சி நடக்குதாம் ... எங்கோ
புலிகள் பாசறை உண்டாம் !
ஊர்ப் புறத்தில் மறைவிலே நாளும்
உருவாகின்றது குண்டாம் !
ஆர்ப்பரித்தல் இன்றி ஓர் தானை
அமைத்தல் புலிகளின் தொண்டாம் !
தீர்ப்பெழுதி விட்டாராம் இளைஞர் ...
சிங்களம் துண்டு துண்டாம் !

உச்சி வெயில்மழை உழைப்பாம் .. பசியாம் ...
ஒவ்வொரு நாளும் பிணியாம் ...
நச்சுப் பாம்புகள் நடக்கும் காட்டில்
நடப்பது புலிகள் அணியாம் ...
பச்சை வெறியர் படுகொலையாளர்
படை நடுவே அவர் பணியாம் ...
அச்சம் இலையாம் ... ஓர் முறை வாழ்வில்
ஆர்ப்பதே சாவு மணியாம்... !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

போர் ஒன்றே இனி வழியாம் ...மண்ணில்
புயலே தமிழ் மக்கள் மூச்சாம் !
பாரில் இந்நாள் புரட்சி படைப்பது
படைஞர் கைக்குண்டு வீச்சாம் !
வீர மணித்தமிழ் ஈழ விடுதலை
விளையும் நாள் குறித்தாச்சாம் !
ஊரில் புலிகள் விலங்கை உடைப்பார்
உடைப்பார் என்பதே பேச்சாம் !



## நீறு பூத்த நெருப்பு
○

நீறு பூத்த நெருப்பு - தமிழ்
நிலத்தில் என்றும் இருக்கும் !
தோற்பதுபோல் தமிழினம்
துவண்டு வீழ நேரலாம் ...
காற்றிலே போர் முரசொலி
கரைந்தொழிந்து தீரலாம் ...
நீறு பூத்த நெருப்பு - தமிழ்
நிலத்தில் என்றும் இருக்கும் !
தெருத்தெருவாய்த் தமிழினம்
தீயில் வெந்து சாகலாம்
உருத்தெரியாமல் தமிழ்
ஊர் சுடுகாடாகலாம் ...
நீறு பூத்த நெருப்பு - தமிழ்
நிலத்தில் என்றும் இருக்கும் !
வெங்களத்தில் தமிழினம்
வீறிழந்து தளம்பலாம் ...
சிங்களவன் வென்றதாய்
சேதி கூடக் கிளம்பலாம் ...
நீறு பூத்த நெருப்பு - தமிழ்
நிலத்தில் என்றும் இருக்கும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## தீப்பொறி

○

அடடா தமிழா!
எடடா படை நீ !
    அடிமை விலங்கை
    உடைத்தெறி !
இடடா ஆணை !
கொடடா செந்நீர் !
    இனத்தைக் காப்போம் !
    நாள் குறி !
நடடா களத்தே !
எடடா கைவாள் !
    நட ! உன் பகைவன்
    தலை பறி !
தொடடா போரை !
விடடா கணைகள் !
    சுடடா ! எழட்டும்
    தீப்பொறி !



ஒடுக்கு முறையும்
அடக்கு முறையும்
    உண்டோ ? மண்ணை
    உடைத்து வா !
அடுக்கடுக்காய்
இடுக்கண் வரினும்
    அஞ்சாதே ! தோள்
    புடைத்துவா !
வடுக்கள் சுமந்து
கிடக்கும் தமிழர்
    வாழ்வின் கொடுமை
    துடைத்து வா !
உடுக்கள் கோள்கள்
நடுக்கம் உற நீ
    உலகில் வீரம்
    படைத்து வா !

தொடங்கடா போர் !
தொடங்கடா போர் !
    தொடங்கு கொடுமை
    துகளாக்கு !
கொடுங் கொலைப் போர்
இடுங்கல் நெஞ்சர்
    குலை நடுங்க
    அடி ! தாக்கு !
ஒடுங்கி நடுங்கி
விடுங் கண்ணீரை
    ஒழி ! போ ! மண்ணின்
    வசை நீக்கு !
முடங்கி வாழோம்!
அடங்கி வாழோம் !
    மூச்சோ டெழடா !
    கொடி தூக்கு !

நிறத்த விழியும்
வெறித்த நோக்கும்
　　நிலத்தை நொறுக்க
　　நீ போர் செய் !
மறத்தை உடையார்
விறைத்த தோளின்
　　திறத்தை மாற்றார்
　　கண்முன் வை!
புறத்தெழுந்து
சிறுத்தையே வா !
　　வெறுத்து வாடா
　　நின் வாழ்வை !
அறத்தை மண்ணில்
முறித்தவன் கை
　　பறித்து வைப்போம் !
　　இஃதாணை !



## ஏக்கம்

○

நான் என்ன கீழோ ?
　　அவனென்ன மேலோ ?
நானும் இங்கவன் போல்
　　வாழ்வதெந் நாளோ ?

　　சீர்மிகு மண்ணாட்சி
　　　　சிங்களன் சொத்தோ ?
　　நீர்விழி தானெங்கள்
　　　　நிலத்தின் உரித்தோ ?

நான் என்ன கீழோ ?
　　அவனென்ன மேலோ ?
நானும் இங்கவன் போல்
　　வாழ்வதெந் நாளோ ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கொடிக்கும் படைக்கும்
அவன் பிறந்தானோ ?
அடிக்கும் உதைக்கும்
அட இங்கு நானோ ?

நான் என்ன கீழோ ?
அவனென்ன மேலோ ?
நானும் இங்கவன் போல்
வாழ்வதெந் நாளோ ?

ஞாலம் அவன் வாழ்வில்
வான வெளியோ ?
நாளும் தமிழன் நான்
கூண்டுக் கிளியோ ?

நான் என்ன கீழோ ?
அவனென்ன மேலோ ?
நானும் இங்கவன் போல்
வாழ்வதெந் நாளோ ?



## எழடா !

○

சொல்லைப் புயலாக மாற்று !
சூடில்லாத் தமிழன்
உடலில் சூடேற்று !
கல்லாய் உன் நெஞ்சினை ஆக்கு !
களத்தில் இறங்கு !
பகைவனைத் தாக்கு !

பொன்னின் எழிலீழ மண்ணில்
போய்ப்பார் ! குருதி
பொங்கும் உன் கண்ணில் !
மின்னை இடியை இறக்கு !
மேனி சிலிர்த்தெழு !
மண்ணை நொறுக்கு !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## விடுதலை

வெறியர் ஆளும் நிலத்தே
விரைந்து போடா...
விழிகள் பழுத்தே !
குறிவை படைகள் செலுத்து !
கொடியர் அரசை
பொடிசெய் ! விழுத்து !

நேற்றுவரை பொறுத் துள்ளோம் !
நீதி அழைத்தது !
நாள் இனித் தள்ளோம் !
ஊற்றடா செந்நீரை இன்றே !
உன்பிள்ளை வாழ நீ
உயிர்விடல் நன்றே !

அரும்பு விரிந்து
பெரும்பூ ஆனது !

வையகத் தடிமை
வாழ்வில் சிறுமுகை
உய்ய நினைத்ததோ ?
இதழ்கள் உடைந்ததேன் ?
வெய்யிலோன் கொடுத்த
கதிர்வாளை அரும்பு
கையில் எடுத்தது...
கட்டறுந்ததே !

அரும்பு விரிந்து
பெரும்பூ ஆனது !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

எத்திசை விழிகள்
நோக்கினும் அடடா !
கொத்துப் பூங்குலை !
கொள்ளைப் பேரெழில் !
முத்தமிழ் ஈழ
முற்றத்தின் அகத்தும்
புத்தம் புதுமலர்
பூத்திடல் கண்டோம்!

அரும்பு விரிந்து
பெரும் பூ ஆனது !

நெடுநாள் முகைஇதழ்
பிணித்த தளைகளின்
கொடுமை நீங்கிற்று !
கொட்டடா முரசம் !
இடுதளை எதிலும்
எதையும் வீழ்த்தலாம்...
விடுதலை தளையில்
வீழுமா ? இல்லை !

அரும்பு விரிந்து
பெரும்பூ ஆனது !



## இன உணர்வு

○

ஈழம் தமிழகம்
என்னும் இருநாட்டினையும்
ஆழம் இருக்கும்
அலைமா கடல் பிரிக்கும் !
பாலும் இளநீரும்
பாகும் கனிச்சாறும்
நாலும் கலந்த தமிழ்
நாளும் எமை இணைக்கும் !

தங்கமண் ஈழம்
தமிழ்நா டிரண்டினையும்
சிங்களவன் போடும்
வேலி சிதறடிக்கும் !
எங்கள் தமிழர்
உயிரில் இணைந்த தமிழ்
வெங்கொடுமை வேலி
வீழ்த்தி எமை இணைக்கும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பண்டைத் தமிழீழ
மண்ணும் தமிழ்நாடும்
அண்டை நெருங்காமல்
சட்டம் வழிஅடைக்கும் !
கண்டை நிகர்த்த
தமிழ் அத் தடை நொறுக்கி
அண்டை நிலங்கள்
அணைய எமைஇணைக்கும் !

கற்றமிழ் ஈழம்
தமிழ்நா டிரண்டினையும்
எற்றைக்கும் எற்றைக்கும்
இன்பத் தமிழ் இணைக்கும் !
சுற்றிச் சுழன்றடிக்கும்
அலை ஆழி நிலமாக
ஒற்றைத் தமிழ்மண்ணாய்
எழுக தமிழுணர்வே !



## உயிர்த்தெழுதல்

○

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

விண்ணின் குண்டுகள்
வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள்
மறுபடி தழைத்தன !
நெடுங்கடற் கரையில்
நேற்றும் புலிகள்
சுடுங்குரல் கேட்டோம்...
தோள் சிலிர்த்தது !

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தண்ணீர் விட்டோ
எரிமலை தணியும் ?
விண்ணின் புயலை
வேலி தடுக்குமோ ?
கடலைக் குடிக்க
நினைத்தவன் யாரடா ?
அட ! இங்கெம்மை
அழிக்கவும் கூடுமோ ?

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

கல்லறை களுக்கும்
உயிர் இங்குள்ளதால்
கொல்வார் கொலை வெறி
இங்கெடு படாது !
பந்தி பந்தியாய்
உயிர் அழியலாம்...
செந்தமிழ் ஈழம்
செத்து விடாது !

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !



## களம் ஆடு!

○

விலங்கு பூட்டிய விலங்கு !
தமிழன்
விலங்கு பூட்டிய விலங்கு!
விலங்கை உடைத்து நில்!
களங்கம் துடைத்துவா!
முழங்கு போர்ச் சங்கம் முழங்கு!
இன்றே
முழங்கு போர்ச் சங்கம் முழங்கு!

ஈழம் பழந்தமிழ் நாடு!
ஏட்டில்
வாழும் குளக்கோட்டன் வீடு !
வேழம் நிகர்த்தவன்
வீழும் நிலை பெற்றான்
நாளும் அழிந்தது நாடு!
வாளும்
தோளும் எங்கே? பகைசாடு!

சிங்களவன் என்ன கொம்போ?
மண்ணில்
எங்கள் தமிழன் துரும்போ?
தங்கத் தமிழீழம்
வெங்கனல் ஆடும் நாள்
இங்குயிர் என்ன கரும்போ?
தமிழா!
பொங்கி எழுந்து களம்போ!

கொடியர் சிறையைக் கொளுத்து!
பகைவர்
மடியத் தலைகள் விழுத்து!
நொடியில் சிங்களர்
பிடியை உடைத்தெறி
அடிமையர் வாழும் நிலத்து
நாளை
விடியும்பார் வானம் வெளுத்து!



## காயாத புதைகுழி கவனி!

○

களித்திருக்காதே...
விழித்திருப்பாய் நீ!

நேற்றுன் காலைக்
கடித்த புடையன்
மாற்றம் கண்டு
விட்டதா? அதை நீ
ஏற்றிடல் வேண்டா!
மீண்டும் அப்பாம்பு
சீற்றம் கொண்டு
தீண்டுதல் கூடும்...

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

களித்திருக்காதே
விழித்திருப்பாய் நீ!

வேலை இன்னும்
உண்டு ! நீ மறவாய்!
தோலை மரத்துப்
போக விடாதே!
மூலை முடுக்குகள்
உற்று நோக்கு!
காலை யாரும்
வாரலாம் ... கவனி!

களித்திருக்காதே...
விழித்திருப்பாய் நீ !

வீரப் புலிகளை
வைத்த புதைகுழி
ஈரம் இன்னும்
காய்ந்திட வில்லை !
யார் அப் புலிகளை
மறப்பார் ? அடஇப்
பாரம் உணர்க !
விடாப்பணி ஆற்று !

களித்திருக்காதே...
விழித்திருப்பாய் நீ !



கைதட்டல் மிக
நன்றே ! விழாவும்
மெய் சிலிர்ப்பும்
மிக மிக நன்றே !
செய் ! சரி ! ஆனால்
நேற்றெம் இளைஞர்
எய்த அம்பின்
இலக்கை மறவாய் !

களித்திருக்காதே...
விழித்திருப்பாய் நீ !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## எது நடந்தால் என்ன ?

○

குண்டு விழுந்தால் என்ன ?— வீடு
குலுங்கி இடிந்தால் என்ன?—உடல்
துண்டு பறந்தால் என்ன?— நாங்கள்
துடித்து மடிந்தால் என்ன ?

தமிழீழத் தாகம் தணியாது !
எங்கள்
தாயகம் யார்க்கும் பணியாது !



பஞ்சம் மிகுந்தால் என்ன ?— நாடு
பசியால் மெலிந்தால் என்ன ?— குழந்தைப்
பிஞ்சு துடித்தால் என்ன ?– அது
பிணமாய் விழுந்தால் என்ன ?

தமிழீழத் தாகம் தணியாது !
எங்கள்
தாயகம் யார்க்கும் பணியாது !

தொழிலைப் பறித்தால் என்ன ?— தெருவில்
துரத்தி அடித்தால் என்ன ?– குருதி
பொழிய வதைத்தால் என்ன ?– நெருப்பில்
போட்டு முடித்தால் என்ன ?

தமிழீழத் தாகம் தணியாது ?
எங்கள்
தாயகம் யார்க்கும் பணியாது !

உறவைப் பிரிந்தால் என்ன ?– ஊர்
ஊராய் அலைந்தால் என்ன ?– பிடித்துச்
சிறையில் அடைத்தால் என்ன ?– நாங்கள்
செத்துத் தொலைந்தால் என்ன ?

தமிழீழத் தாகம் தணியாது !
எங்கள்
தாயகம் யார்க்கும் பணியாது !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## மூச்சு

○

எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா !
என்றும்
பிறன் இடும்
இரையை
அவை தொடா !

வெட்ட
வெளியே
வீடாய்
ஆகலாம்...
பட்டினி
எங்கள்
உணவாய்ப்
போகலாம்...





நெரிக்க
எண்ணாதீர்...
இரும்பினும்
வல்லோம்...
எரிக்க
நினைக்காதீர்
நெருப்பாய்
உள்ளோம்...!

எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா !
என்றும்
பிறன் இடும்
இரையை
அவைதொடா !

விடுதலை
மூச்சு
புயலினும்
வலிதே!
அடிமையின்
பாய்ச்சல்
ஒருநொடிப்
பொழுதே !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

ஈழச்
சிறைமதில்
இடியப்
பிரிப்போம்...
நீளச்
சிறகுகள்
நிமிர
விரிப்போம்...

எங்கள்
பறவைகள்
கூண்டில்
அடைபடா !
என்றும்
பிறன் இடும்
இரையை
அவை தொடா !

# நெருப்பு



சிங்கள அரசின் தமிழின
ஒழிப்புக் கொள்கையையும்,
ஒடுக்குமுறையையும்
எதிர்த்துக்கவிஞரிடமிருந்து
கனன்ற நெருப்புப்
பொறிகள்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# நெருப்பு

○

தமிழா! இப்புலவன் முழங்கும்
தமிழைஉன் கைக் குண்டாய்த்
தாங்கடா! தாங்கு!
தமிழீழத் தாய்மண்ணை மோதும்
தறுக்கனின் தலையைப் போய்
வாங்கடா! வாங்கு!

வேழத்தை அடித்துவா புலியே!
விரைந்து வா! எரிதழல்
மூட்டடா! மூட்டு!
ஈழத்தை ஆண்ட சங்கிலியன்
எங்கே? அவன் வீரம்
காட்டடா! காட்டு!

வானம் உயர்ந்தநின் வீரம்
வளைந்தது! போர்க்களம்
ஆடடா! ஆடு!
மானம் வளைந்தது கண்டாய்!
மாற்றான் பிணத்தில் மண்
போடடா! போடு!



எறியடா நெஞ்சைஓர் புறத்தே!
இரும்பாக உன்னைநீ
இறுக்கடா! இறுக்கு!
பொறிஎழும் களத்தில் நடப்பாய்!
பொங்கு பகைப்புலம்
நொறுக்கடா! நொறுக்கு!

பண்டைத் தமிழனாய் மாறு!
படைஉலைத் தீயில்வாள்
காய்ச்சடா! காய்ச்சு!
சண்டைக் களம்நோக்கி ஏறு!
சாவின் வாள் எதிரிமேல்
பாய்ச்சடா! பாய்ச்சு!

எந்தமிழ்ச் சேயுடல் நெருப்பில்
இட்டான் உடல்தீயில்
ஏற்றடா! ஏற்று!
செந்தமிழ்ப் பெண்ணுடல் தொட்டான்
செந்நீரைத் தமிழ்மண்ணில்
ஊற்றடா! ஊற்று!

தின்னவோ மண்ணில் பிறந்தோம்?
தீரப்போர் முரசொலி
முழக்கடா! முழக்கு!
செந்நீர் குளித்துவா ஏறே!
சிங்களம் சேறாக
உழக்கடா! உழக்கு!

கொலைஞரைக கொல்தலே அறமாம்!
கொஞ்சமும் அஞ்சாதே!
கொல்லடா! கொல்லு!
நிலைபுகழ் கொள்தலே மறமாம்!
நிமிர்வுகொள்! நெருப்பிலே!
நில்லடா! நில்லு!

இடியை வான்புயலை வெடிக்கும்
எரிமலைக் குன்றை நீ
திரட்டடா! திரட்டு!
பொடியாகி விழட்டும் இவ்வையம்!
போர்க்களம் தலைகீழாய்ப்
புரட்டடா! புரட்டு!

தீஆடு களத்தில்நீ ஆடு!
செத்தாலும் களம் நின்று
சாகடா! சாகு!
தாய்நாடு காத்திடும் சாவு
சாவன்று! சர்க்கரைப்
பாகடா! பாகு!

கொடியர் நஞ்சுள்ளத்தர் மாற்றார்
கொட்டத்துக் கோர்அணை
கட்டடா! கட்டு!
அடிமையர் விடிவைத் தடுக்கும்
அணையை உடைத்திங்கே
கொட்டடா! கொட்டு!



கூண்டுக் கிளிக்கோலம் நன்றோ?
கொதிக்கும் இறக்கைகள்
ஏந்தடா! ஏந்து!
தாண்டிவா! அடிமையர் கூண்டைத்
தகர்த்துவா! விண்ஏறி
நீந்தடா! நீந்து!

ஐயம் அகற்றிவை தமிழா!
ஆம்! வெற்றி உனதே!நீ
நெருப்படா! நெருப்பு!
வையம் அசைத்திடும் வீரம்
வழிவழித் தமிழர்கை
இருப்படா! இருப்பு!

புதியபோர்க் கருவிகள் புத்தம்
புதிய துமிக்கிகள்
தூக்கடா! தூக்கு!
எதிரியின் சண்டை விண்ணூர்தி
எரியத் திசை பத்தும்
தாக்கடா! தாக்கு!

சாவினை இயற்கையாய்ப் பெறுவோன்
தானாக விழும் இலைச்
சருகடா! சருகு!
ஆவியைக் களத்திலே எறிவோன்
அன்றோநீ? புகழ் ஆடிக்
கருகடா! கருகு!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பெருந்திர ளாய்எழு தமிழா!
பெற்றமண் அழித்தானை
மொத்தடா! மொத்து!
அருந்தமிழ் ஈழமண் அடஉன்
அற்றைப் பழந்தமிழ்ச்
சொத்தடா! சொத்து!

சிங்களன் என்னடா கொம்போ?
சீறடா சிறுத்தையே!
சீறடா! சீறு!
பொங்கிவா! மண்வாழக் களத்தில்
போரிடல் நீ பெற்ற
பேறடா! பேறு!

சோற்றில் விளைந்தோமா? இல்லை!
சூறை வெறிக்காற்றே!
கிளம்படா! கிளம்பு!
'ஆற்றல் நிறைந்தவன் தமிழன்
அறிகஇப் புவி!' என்று
விளம்படா! விளம்பு!

எட்டா படைஇன்றே எட்டா!
எண்டிசை குண்டுகள்
கக்கடா! கக்கு!
சுட்டா களம்நின்றே சுட்டா!
சுடுநீ! பகை நூறு
சுக்கடா! சுக்கு!



ஈழத் தமிழ்நாட்டுக் கடலில்
எந்தமிழ்ப் படைக்கலன்
நடத்தடா! நடத்து!
ஆழக் கடல்வெறி அலையில்
அடித்துப் பகைஉடல்
கிடத்தடா! கிடத்து!

விடுதலை உயிரினும் மேலாம்!
விழித்தெழு! களமாடித்
துள்ளடா! துள்ளு!
கொடுதலை! குருதிநீர் ஆற்றில்
குளித்தெழு! விடுதலை
கொள்ளடா! கொள்ளு!

நாய்வாழ்வு வாழவோ பிறந்தோம்?
நக்கிப் பிழைக்கவோ?
நன்றடா! நன்று!
வாய்மூடி வாழவோ இருந்தோம்?
வாழ்வதும் சாவதும்
ஒன்றடா! ஒன்று!

'எம்மை எதிர்த்தவர் வென்றார்
இலை!' யென்று களத்தில்நீ
ஓதடா! ஓது!
'செம்மை இலார்களம் நின்றார்
செத்தார்!' என்றெழுந்து நீ
மோதடா! மோது!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பகைவனின் கால்பற்றி காடு
பாழ்செய்வான் உயிர்கையில்
பற்றடா! பற்று!
தொகை பெற்றுப் பகைவனைத் தொழுவான்
தொழும்பனைக் கால்தூக்கி
எற்றடா! எற்று!

கொல்லுசிங் களர்படை தனிலும்
குழிபறிப்போன் நெஞ்சம்
கொடிதடா! கொடிது!
பொல்லாக் களை பிடுங்காமல்
போர்வெல்தல் எற்றைக்கும்
கடிதடா! கடிது!

எழடா! படையாகி எழடா!
எதிரியின் வலி எலாம்
நசுக்கடா! நசுக்கு!
விழடா! இடியாகி விழடா!
விழு!போ! பழிஎலாம்
பொசுக்கடா! பொசுக்கு!


தஞ்சமாய் வந்தவன் எங்கள்
தாய்மண்ணை அழிக்கவோ?
சாம்படா! சாம்பு!
வஞ்சனை உடையானை அழிப்பாய் !
வழிவழித் தாய்மண்ணை
ஓம்படா ! ஓம்பு !



ஆர்க்கட்டும் முரசுகள் எழடா !
அறம்வாழக் களத்தை நீ
தழுவடா! தழுவு!
போர்க்களக் குருதிநீர் ஆற்றில்
புறம்வாழத் தமிழ்மேனி
கழுவடா! கழுவு!

எட்டுத் திசைகளும் தமிழன்
இழிந்த நிலை நெஞ்சில்
இருத்தடா! இருத்து!
கெட்டுக் கிடந்தஉன் மண்ணின்
கிழிந்தபாழ் வரலாறு
திருத்தடா! திருத்து!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



*தமிழீழ விடுதலைக் களத்தில் முப்பத்தைந்து ஆண்டுகளாக உறுதியாக நிற்கும் கவிஞர், களத்தில் நின்று வடித்த பாடல்கள்.*



## அறம் !

குருவி படைத்த குஞ்சுதனைக் காகம்
　　கொத்திப் பறந்தது போல்
எருவிட் டுழவன் வளர்த்த பயிர்தனை
　　எருமை அழித்ததுபோல்
கருவில் விளைந்தஎன் கண்மணிப் பாடல்
　　கயவர் பறித்தனரே...
பெருகு விழியின் நெருப்பொடு பாவலன்
　　பெரு மூச்செறிகின்றேன் !

இன்னுயிர்ப் பாக்கள் இழந்தேன் ! இழந்தேன் !
　　எரியுது பார் நெஞ்சம் !
மின்னல் வெடித்துச் சிலிர்த்தது போலென்
　　மேனி சிலிர்க்குதடா !
பொன்னை இழப்பினும் இழப்பேன் ! அடஎன்
　　புலமை பறி போகவோ ?
என்னுள் இருந்தோர் அன்னை கருப்பை
　　இரத்தம் சொரியுதடா !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தீய அறம்யான் பாடுவன்! என் தமிழ்
தீண்டிய கை அழுகும்!
தாயில் இனிய என் பாடல் பறித்தவன்
தலையில் இடி இறங்கும்!
பாய வரும் என் அறம்படத் தீயனின்
பாடை உலா நிகழும்!
ஆயிரம் ஆண்டுகள் தீயெழும் என்தமிழ்
அழிக்கும் பகை அழிக்கும்!

O

மட்டுநகரில் சிங்களப் படையாலும் - காவல்துறையாலும் கவிஞர் வீட்டில் அடிக்கடி தேடுதல் நடத்தப்பட்ட காலம் ஒன்றுண்டு. ஒவ்வொரு தடவையும் அவர்கள் கவிஞர் வீட்டில் இருந்து பாடல்களை அள்ளிச் சென்றார்கள். 1961 இல் ஒருமுறை பாடல்களைப் பறி கொடுத்த நிலையில் கவிஞர் மனம் நொந்து பாடியது.



## சிறை நெருப்பு

O

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்!
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்?

நீள நெடுமதில்
சூழ இருட்சிறை
நெருப்பில் கிடக்கின்றேன்...
ஈழ எழில் நிலம்
வாழக் கொடுஞ்சாவின்
இடுக்கில் நடக்கின்றேன்...

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்!
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

புல்லும் புழுக்களும்
கல்லும் உணவாகிப்
போகுதடா வயிற்றில !
அல்லும் பகலும்
அட ! என் உயிர்தொங்கி
ஆடுதடா கயிற்றில் !

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும் !
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார் ?

சின்னத் துளை வழி
மின்னல் ஒளி வரச்
சிந்தை துடிக்கின்றேன் !
என்னைச் சிறை கொள்ளும்
மண்ணைச் சினந்து நான்
இடியாய் வெடிக்கின்றேன் !

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும் !
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார் ?



பாயும் படுக்கையும்
நோயும் நொடிகளும்
பார்க்குதடா மேனி !
போயும் போயும் உயிர்
மேயும் சிறைக்கிந்தப்
புலவனொடா தீனி ?

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும் !
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார் ?

○

*1975 இல் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்த போது கவிஞர் பாடியது.*

கா—4

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# விலை

○

இனிது விடுதலை இனிதென் றுரைத்ததால்
என் தலைக்கு நீர் விலைவைத்தீர் !
பனி கரையலாம் இன விடுதலைப்
பற்றும் கரையுமோ பாவிகாள் ?
மனித உயிரிலும் பெரிது விடுதலை !
மடிதல் என்பது சிறியதே !
குனிவதில்லை என் தலை ! எவன் விலை
குறித்தவன் ? அவன் எங்குளான் ?



அச்சம் இலாதஎன் தமிழர் குருதியின்
அணுவில் உள்ளது விடுதலை !
பிச்சை விலைஎவன் குறித்தவன் ? தலை
பிடுங்க நினைத்தவன் எவனடா ?
நச்சை ஊட்டினும் அஞ்சிடோம் ! உயிர்
நரம்பை அறுப்பினும் அஞ்சிடோம் !
உச்சிவைத்து யாம் போற்றும் விடுதலை
உயிரில் இனியதே ! இனியதே !

○

*1978 ஏப்ரல் 7 இல் மன்னார்க்காட்டில் புலிகள் முகாம் மீது பாய்ந்த சிங்கள புலனாய்வு அதிரடிப் படையைப் புலிகள் சுட்டு வீழ்த்தினார்கள். இப்படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய பஸ்தியான்பிள்ளை கொல்லப்பட்டான். இந் நிகழ்வைத் தொடர்ந்து பிரபாகரன் உட்பட தமிழீழ வீரர் பலர் தலைகளுக்கு விலை குறித்து அரசு சுவரொட்டி வெளியிட்டது. காசி ஆனந்தனை பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா. 25,000 என்று அறிவித்தார்கள். அன்று பிறந்த பாடல்.*

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# தமிழ் நாடே !

○

என்னரும் தமிழ்நாடே! உன்னை
    எப்படி நெஞ்சம் மறக்கும்?
அன்னைபோல் தாங்கினாய் என்னை!
    அம்மா உன்வீட்டில் இருந்தேன்!
தின்னவும் உடுக்கவும் தந்தாய்!
    தேவி!நின் அருள்மிகப் பெரிதாம்!
உன்னை எந்நாளும் நினைப்பேன்!
    உண்மை! ஆம்! இதுநன்றி உள்ளம்!



தீய சிங்களர் படை வெறியர்
    தேட நான் இங்கோடி வந்தேன்!
பாய எழும் வெறிக் கடலில்
    பட்ட துயர் கொஞ்சம் இல்லை!
நீயன்பு கொண்டென்னை ஏற்றாய்!
    நெருப்பாய் உன்மடிநின்று கனிந்தேன்!
தேயம் அழைத்தது தாயே!
    திரும்புவேன்... களமாட வேண்டும்!

○

*1983 தொடக்கம் 1987 வரை தமிழ்நாடு வந்த விடுதலைப் புலிகள் அனைவரையுமே தமிழ்நாடு தாங்கிக் கொண்டது. இக்காலத்தில் தமிழ்நாட்டில் தங்கியிருந்த கவிஞர் தமிழீழம் புறப்படும்போது பாடிய பாடல் இது.*

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## ஒரு துயரம் ...

○

தங்கை மலரை
தனிமைச் சிறையில்
எங்கோ கொடியர்
இருத்தி னார்களாம்...

கீழே நிலத்தில்
கிடத்திச் செருப்பால்
மேலே மிதிக்க
மேனி துடித்ததாம்...

அடியாம் உதையாம்
ஆயிரம் வதையாம்
நொடியா அவளுடல்
நொடிந்து போனதாம்...



அன்புத் தங்கையின்
ஆவி பிழைக்கும்
என்பது கூட
நம்புதற்கிலையாம்...

○

கவிஞர் சிறீலங்கா படைகளிடம் இருந்து தப்பி தமிழ் நாட்டில் தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் அவர் தங்கை சிவமலர் தமிழீழத்தில் சிங்களப் படையினரால் கைது செய்யப்பட்டாள். 12-10-1984 இல் கைதான கவிஞரின் தங்கை பட்ட சிறைக் கொடுமை பெரிது. சேதி அறிந்து தமிழ்நாட்டில் இருந்த கவிஞர் எழுதிய பாடல். பூசா முகாமிலும் காலி சிறைச்சாலையிலும் ஓராண்டு சிறைவாசம் முடித்து 12-10-85 இல் சிவமலர் விடுதலை ஆனார்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## புலிகள் பாசறை

○

நீல மலைகள் நிமிர்ந்து நிற்கும்!
காலம் வெய்யில் காலம் ஆயினும்

புல்லைப் போல் கருகாத பனைகள்
எல்லைப் புறத்தில் காவல் இயற்றும்...

ஈழப் புலிகள் குடி இருப்பின்
சூழல் அழகைச் சொல்லுதல் எளிதோ?

நெருப்பு விழியொடும் நிற்கும் புலிகள்
இருப்பிடம் இஃது நெருப்பிடம் கண்டீர் !

தோள்கள் வளரும் தோட்டம் என்பேனா?
ஈழம் வளரும் கருப்பை என்பேனா?



என்னென்பேன் யான்! என்னென்பேன் யான்!
பொன்னின் காலைப்பொழுதில் புலிகள்

நடத்தும் போரின் பயிற்சி கண்டால்
முடத் தமிழருக்கும் முதுகு நிமிரும்!

ஒப்பிலா வீரம் ஒன்றுடையார் தம்
இப்படை பார்த்தால் எலி புலியாகும்!

அடடா! இந்நாள் அஞ்சாப் புலிகள்
படைவாழ் பாசறை இடையான் வாழ்ந்தேன்!

வீறுடை யாரைப் பாட என் பேனா
பேறு பெற்றதே! பேறு பெற்றதே!

○

*தமிழீழத்துக்கு வெளியே இருந்த பயிற்சி முகாம் ஒன்றில் தங்கியிருந்து 15—4—1986 இல் கவிஞர் பாடியது. இம்முகாமுக்கு தளபதி பொன்னம்மான் பொறுப்பாய் இருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் முழுநேர உறுப்பினர் ஆகுமுன் கவிஞரால் இப்பாடல் பாடப்பட்டது.*

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

# தம்பி ஜெயம்

○

தம்பி நீ என்
    தசையும் குருதியும்
என்பும் உயிரும்
    எல்லாமும் என்பேன்!

ஐயா! நின் உயிர்
    அழிந்ததாம் போரில்!
மெய்யா? உன் எழில்
    மேனி சாய்ந்ததா?

அட என் தம்பி!
    அண்ணனை மறந்தா
இடம் நீ பெயர்ந்தாய்?
    எப்படி முடிந்தது?

நஞ்சை உண்டு
    நாடு காத்தவனே!
நெஞ்சம் எரிய
    நிற்கின்றேனடா!



மண்ணுக்காய் நீ
    மடிந்த சாவினை
எண்ணி மகிழ்கிறேன்...
    இருந்தும் அழுகிறேன்!

வெம்பி வெதும்பி
    விழிநீர் சொரிந்ததே!
தம்பி! உனக்கென்
    தளிர்மனம் தெரிந்ததே!

○

கவிஞரின் தம்பி சிவஜெயம் விடுதலைப் புலிகளின் படைத்தலைவர்களில் ஒருவராக இருந்தவர். 10-9-1988 இல் இந்திய அமைதிப்படை நடவடிக்கையின்போது மட்டக்களப்பு தாளங்குடாவில்-எதிரிகள் முற்றுகையில் நஞ்சை உண்டு வீரச்சாவு பெற்றார். தம்பியின் மறைவுச் செய்தி அறிந்து கவிஞர் பாடிய பாடல்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

முதல் சுவடுகள்...



*தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நஞ்சை (சயனைட்) உண்டு மடிந்த முதல் வீரன் சிவக்குமாரன். 5—6—1974 இல் சிங்களக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டபோது இவ் வரலாற்றுச் சாவை அவன் சந்தித்தான்.*



## முதல் சுவடுகள்...

○

நேற்றைக் கெங்கள் நிலத்தில் புதியதோர்
காற்றைக் கொணர்ந்தான் களப்புகழ் ஆர்ப்பாம்...

உண்டு விடுதலை நாளை உண்டெனக்
குண்டு சுமந்தான் கோலம் பாடுவாம்...

தாயகம் எழ தமிழன் தோள் எழ
தீயெழ எழுந்தான் தீரம் போற்றுவாம்...

பணிந்த தமிழனை குனிந்த தமிழனை
துணிந்தெழ வைத்த தோள் அவன் தோளே!

புல்லாய் வளைந்து போன தாய் மண்ணை
கல்லாய் நிமிர்த்திய கை அவன் கையே!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

உருப்படா திருந்த தமிழன் நெஞ்சில்
நெருப்பெழ வைத்த நெஞ்சவன் நெஞ்சே !

ஈழம் இன்னுயிர் விடுதலை எய்தும்
காலம் காட்டவே காளை பிறந்தான் !

ஒளிக்கதிர்ப் பரிதி உதிக்கும் செய்தி
விளக்கவே இவ் வெள்ளி பூத்தது !

எந்தமிழ் ஈழ மண்ணில் இளைஞன்
வந்த நாள் வீரம் வந்தநாள் என்பேன் !

அழிக்க வந்தவர் அழிய மானம்
செழிக்க வந்தவன் சிவக்கு மாரன்!

சிங்களப் படைஞர் கண்களில் கனவில்
எங்கணும் என்றும் இருந்தவன் ஏந்தல் !

காட்டிக் கொடுப்போர் கதறக் கதற
ஓட்டிக் கலைத்தவன் உரும்பிராய்ப் பிள்ளை !

எதிரி மகிழ்ந்த எம் சாவை எதிரி
பதறி நடுங்கும் சாவாய்ப் படைத்தான் !

நஞ்சை உண்டு நாட்டுக்காய் மடியும்
அஞ்சாப் போர்முறை அவனிடம் கற்றோம் !

மேடைப் பேச்சில் உறங்கிய நாங்கள்
பாடை அமைதியில் விழிப்புற் றெழுந்தோம் !

களப்போர் ஆடல் கற்றுத் தெளிந்தோம் !
இழக்கத் தெரிந்து பெறப் பழகினோம் !



எங்கள் மண்ணின் விடுதலைக்காய்
தங்கள் இளமையை இளைஞர் தந்ததும்

காதல் விரும்பும் காலம் போரில்
சாதல் விரும்பிச் சாம்பல் ஆனதும்

இடங்கள் எங்கும் வீர இளைஞர்
படங்கள் தொங்கும் நாள் பழுத்ததும்

அந்த வீரன் அடிச்சுவ டொற்றி
வந்த எங்கள் வரலா றென்போம்...!

செயல்மா வீரன் சிவக்கு மாரனின்
உயிரும் இனிதே! சாவும் இனிதே!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



களத்தில் வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகளை-மாவீரர்களை கவிஞர் பாடியது.

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்



## சங்கர்

○

சங்கர் உனக்குச் சாவோர் முடிவே !
எங்களுக் கோ நின் சாவுதான் தொடக்கம் !

கண்கள் மூடிய களத்தின் முதற்புலி
உன் வழி எங்கள் உயிர்வழி ஆனது !

பாவிகள் தமிழன் உயிர் பறித்தநாள்
சாவினைத் தடுக்கச் சாவினை ஏற்றாய்... !

விழுவோ ருக்காய் அழுவோர் மண்ணில்
அழுவோருக்காய் விழுந்தாய்...பார்த்தோம் !

தழைக்க ஓங்கித் தமிழீழப் பொழில்
முளைக்க நீயே முதல்விதை ஆனாய் !

எங்கள் மண் உன் சாவில் உயிர்க்கும் !
எங்கள் வாழ்வுன் உதிர்வில் பூக்கும் !

○

தமிழீழத்தில் களத்தில் பலியான முதல் விடுதலைப்புலி தளபதி சங்கர். சத்தியநாதன் என்பது இவர் இயற்பெயர். 27-11-1982 இல் வீரச்சாவு.



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## பரமதேவா
○

ஏழெட்டுத் தாளிட்டு
வீட்டிலே கோழைகள்
ஆகி இந்நாள்
'ஊழ்விட்ட படிவாழ்ந்தோம்...'
எனவாழ்ந்தார் உதவாத
தமிழர் ! நீயோ
சூழ்இட்டுப் போரிட்டுக்
களமாடி நடுமார்பில்
சூடு பட்டாய் !
பாழ்பட்ட தமிழ்வாழ்வில்
பளிச்சென்னும் வெளிச்சம் நீ
பரம தேவா !



உய்ந்திடல் இயலாதார்
தமிழ்மக்கள் நைந்திடல்
உலகில் கண்டாய் !
'தொய்ந்ததோ தமிழ்மானம் ?'
என்றார்த்தாய் ! ஐந்தாண்டு
சிறையில் தோய்ந்தாய் !
மைந்த ! நீ சிறைச்சாலை
உடைத்தனை ! படைத்தனை
வரலாறென்பேன் !
பைந்தமிழ் ஈழத்தில்
பளிச்சென்னும் வெளிச்சம் நீ
பரமதேவா !

'உடைகொண்டு வாழ்வதோ
மானம் ? இவ்வுலகினில்
தலை நிமிர்ந்த
படைகொண்டு வாழ்வதே
மானம் !' என்றாய் ! களம்
நடந்தாய்...ஆவி
விடைகொண்டு போக நீ
வீழ்ந்தாய் ! ஆம் ! விடுதலைக்
களத்தே நிற்கும்
படைகொண்ட வர்க்கெலாம்
பளிச்சென்னும் வெளிச்சம் நீ
பரமதேவா !

ஒட்டு சுட்டானென்னும்
ஊரில் நீ சிங்களர்
படையில் ஒன்றைச்
சுட்டுவிட்டாய் என்ற
சேதியில் நேற்றுநான்
துள்ளி ஆர்த்தேன்...
வெட்டுவான் மின்னல்போல்
வீழ்ந்தாயே...கண்முன் நீ
வீழ்ந்தாய்...வீழ்ந்து
பட்டாலும் என்றைக்கும்
பளிச்சென்னும் வெளிச்சம் நீ
பரம தேவா !

○

*மட்டக்களப்பின் வீரவேங்கை பரமதேவா தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவர். 22-9-84இல் விடுதலைப்புலிகள் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின் மீது நடத்திய தாக்குதலின்போது வீரமரணமடைந்தார்.*



## ஐங்கரன்

○

காரிருள் இரவிலே ஓர்நாள்
கடல் முட்டும் கொக்கிளாய் உப்புநீர் ஆற்றில்
பார்வையில் இருளன்றி ஏதும்
படாத ஓர்வெளியில் புலிப்படை வீரர்
நீரிலே நடைபோட முன்னால்
நில்லுங்கள் வாருங்கள் என வழிகாட்டிப்
போர்வீரன் ஐங்கரன் போனான்...
புலிப்படை வரலாற்றில் அது பொன்னாள் ஆகும்!

காடுதான் ஐங்கரன் வீடு!
காரிருள் ஐங்கரன் கண்ணுக்கு வெளிச்சம்!
மூடு மறைவிடம் நின்று
மோதும் புலிப்படை வீரரில் முதல்வன்!
கேடுசெய் வெறியர்தம் உடலம்
கிழித்தெறிகின்ற புலித்தமிழ்ப் பிறவி
பீடுறு கோணமா மலையின்
பெருமைக்குப் பெருமையாய் வந்தவன் பிள்ளை!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

வன்னியில் ஐங்கரன் காட்டில்
வாழ்ந்தநாள் எதிரிகள் வீழ்ந்தநாள் அன்றோ?
முன்னின்றான் களத்திலே வேங்கை!
மூண்டது பெரும்புயல்! மூண்டது நெருப்பு!
கண்ணியில் வஞ்சகர் மாண்டார்!
கண்டது செம்மலை பிணமலைக்குவியல்!
எண்ணிட நெஞ்சம் சிலிர்க்கும்!
எழுதக்கை சிலிர்க்கும்! எழுத்தும் சிலிர்க்கும்!

தறுக்கர் கொடும்படை நிலையம்
தாக்கினான் ஐங்கரன் ! ஒட்டுசுட்டானில்
நொறுக்கினான் எதிரிகள் மார்பை !
நூறு புயல்காற்றாய் வீறுகொண்டெழுந்தான் !
முறுக்குடல் மாவீரன் வேங்கை
முந்தைநாள் களத்தில் முடிந்தானாம் கண்டீர்...
பொறுக்குமோ தமிழனின் நெஞ்சம்?
புலிவீரன் இவனை இழக்குமோ புவியே !

○

புல்மோட்டை பதவியா வீதியில் 18-12-84 இல் சிங்கள வெறிப்படையோடு நடந்த மோதலில் தோழன் கடாபியோடு வீரமரணம் அடைந்தவன் ஐங்கரன்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



## பண்டிதர்

○

சண்டியன் சிங்களன்
தோற்றோட எண்டிசை
தலை நிமிர்ந்து
குண்டினைப் பெய்தவன்
ஈழத்தை முண்டியோர்
குடல் கிழித்தோன்
பண்டிதன் ரவீந்திரன்
புலிப்படைச் சண்டையில்
பழுத்த வீரன்
தொண்டினைப் பாடுவேன்
களச் சாவு கண்டவன்
தோள்கள் வாழ்க !

அகவை ஓர் பதினாறில்
பண்டிதன் புலிப்படை
வீரன் ஆனான் !
'புகழ் கெட வாழ்வனோ ?'
எனப்பகை தூள்படப்
பொங்கி ஆர்த்தான் !
தக தக எனவிழி
நெருப்பெழ எழுந்தவன் !
தமிழ வேங்கை !
திகழ் தமிழ் ஈழமண்
உயிர்பெறத் தன்உயிர்
தீர்த்தான் அம்மா !

கோடிவான் இடிபாய்ந்து
தலைமிசை வீழினும்
குலையா நெஞ்சன் !
தேடி யார் படைவந்து
பொருதாலும் எதிர்கொண்டு
மோதும் தீரன் !
'பேடி காண்' எனப்பிறர்
வசைசொன்ன தமிழனை
மறவன் ஆக்கிப்
பாடிதான் வாழ்வென்று
வாழ்ந்தவன் பண்டிதன்
பார்த்தோம் ! பார்த்தோம் !



கம்பர் மலை ஊரான்
பண்டிதன் எரிமலை
காட்டும் வீரன் !
தெம்பெலாம் ஈளைநோய்
பறித்துடல் துரும்பெனத்
தேய்ந்த போதும்
வம்புசெய் பகைவரை
நாள்தொறும் வதைத்துடல்
கிழித்த வேங்கை !
செம்படை மாவீரன்
சேகுவே ராவைப்போல்
வாழ்ந்து செத்தான் !

காரிருள் வேளையில்
சிங்களர் பண்டிதன்
கதை முடித்தார்...
ஓர்தமிழ் வீரனை
நூறுபேர் முற்றுகை
இட்டொழித்தார் !
போரெனில் களிப்பவன்
பண்டிதன் அப்போழ்தும்
பொல்லா நெஞ்சர்
மார்புகள் நொறுக்கினான்...!
தன்மார்பும் நொறுக்கினான்...!
மடிந்தான் கண்டீர் !

○

கம்பர் மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மாவீரன் பண்டிதர், விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணத் தளபதியாக இருந்தவர். இரவீந்திரன்—பெற்றோர் இட்டபெயர். 9-1-85இல் அச்சுவேலியில் நிகழ்ந்த சிங்களப்படை முற்றுகையில் பலி ஆனார்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## மாலதி

○

விண் நின்ற இருள்தனை
அடித்தவெண் முழுநிலா
வீழ்ந்த தென்ன ?
மண்ணின் நோய் தீர்த்தமா
மருந்துச் செடி சாய்ந்து
மடிந்த தென்ன ?
கண்முன் கொடும் பாம்பைக்
கடித்த மயில் சாவு
கண்ட தென்ன ?
பெண்விடு தலைப்புலி
மாலதி எமைவிட்டுப்
பிரிந்ததென்ன ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010




சிங்களர் காலின் கீழ்
வதைபட்டார் சிதைபட்டார்
தமிழீ ழத்தார்...
மங்கையர் தமிழ்மண்ணில்
அழ நின்றார்... ஒருமங்கை
புலியாய் ஆனாள் !
பொங்கினாள் இளம்பாவை !
களம் போனாள்... எதிரிகள்
புதைந்து பட்டார் !
தங்கச்சி களத்தினில்
மாண்டாளாம்... தமிழ்மேனி
கொதிக்குதம்மா !

பெண்டென்றால் மனைவாழ்வாள்
எனும் கொள்கை பெயர்த்தவள்
பெண் போராளி
குண்டேந்திக் களம் நின்று
தமிழ்மண்ணில் முதற்சாவு
கண்ட கோதை
எண்டிசை பெண்வீரம்
எழநின்ற எரிமலைப்
பெண் பிறப்பு
வண்டமிழ் ஈழமண்
வரலாற்றில் அழியாத
வரியாய் ஆனாள்...

○

தமிழீழ விடுதலைக் களத்தில் வீரச்சாவு கண்ட முதல் பெண் விடுதலைப்புலி மாலதி. 10-10-1987 இல் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் 'சயனைட்' நஞ்சை உண்டு சாவைத் தழுவிக் கொண்டாள்.

## பொங்கல்



போரின் நடுவில் தமிழீழத்தில்
பொங்கலைக் கவிஞர்
பாடியது.

## விழாவா ? நமக்கா ?

○

நங்காய் ! விழாவா ? நமக்கா ? எதுக்கடி ?
அங்கே பார் ! தாய்மண் அழிதல் பார் !
இங்கு வா !
தங்கச் சிலையே ! அடுப்பைத் தகர்த்தெறி !
பொங்கல் விழாவேண்டாம் ! போ !

துணி இழந்தாள் ஈழத் தமிழச்சி ! காமப்
பிணி யுடையார் கைபட்டுப் பிய்ந்தாள் !
மணிச் சிட்டே !
இத்தனை கண்டும் விழாவா ? நெருப்பிலுன்
புத்தாடையைத் தூக்கிப் போடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கோலம் எதுக்கடி ? அன்பே குருதியால்
ஈழமண் கோலம் எழுதும் நாள்
ஞாலம்
அழுதது கண்டாய் ! அடி பாவி ! கோலம்
எழுதும் உன் கையை எடு !

இரும்பு மனப்பெண்ணே ! கூறடி இந்நாள்
கரும்பு சுவைக்குமோ கண்ணே ?
திரும்பு !
கொடுநஞ்சை வீரர் குடிக்கும் களம்பார் !
விடு பொங்கல் வேண்டாம் விடு !



## தை மகள் வந்தாள் !

○

எரிந்தது கீழை வான் !
தைமகள் போர்க்கொடி
ஏந்தி வந்தாள் !
சொரிந்தது திசை எட்டும்
பகைவர்தம் உடற்செந்நீர் !
சுடுகா டெல்லாம்
தெரிந்தது கொடியவர்
பிணக்குன்றம் ! தெறித்தது
கயவர் ஆட்சி !
பிரிந்தது தமிழீழம்
தனி நாடாய் ! பிறந்தது
புதிய வாழ்வே !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பதறின களத்தினில்
வெறிப்படைப் பன்றிகள் !
தமிழீ ழத்தில்
கதறின குண்டுகள் !
தமிழனின் நெருப்பெழும்
கணைகள் பட்டுச்
சிதறின வான்மிசை
பகைவர் விண்ணூர்திகள்
சிறகும் வாலும் !
உதறின வெறியர்தம்
மேனிகள் ! உயிர்த்தது
புதிய வாழ்வே !

அடித்தது புலிப்படை !
அறுந்தது கொடுமையின்
தடித்த கீழ்வேர் !
படித்தது சிங்களம்
பாடம் ! முடித்தது
பகையை நாடு !
வெடித்தது முரசொலி !
உயர்புகழ் படைத்தது
தமிழர் மானம் !
வடித்தது புலவன்கை
வெற்றிப்பா ! கிடைத்தது
புதிய வாழ்வே !



## கண்டேன் !

○

பொங்கல் விழாவினிலே அடுப்பில்
புகையும் நெருப்பினிலே
எங்கள் தமிழனைச் சிங்களர் மண்மிசை
எரித்த தழல் கண்டேன் !

ஆழப் பானையிலே பசும்பால்
அடுப்பில் கொதிக்கையிலே
ஈழத் தமிழர் செந்நீர் நுரைபொங்கி
எதிரில் வழியக் கண்டேன் !


விடியல் காலையிலே கரும்பை
வெட்டும் பொழுதினிலே
தடியர் சிங்களர் கொடியர் தமிழ்மேனி
தறித்த காட்சி கண்டேன் !

வீட்டுப் புறத்தினிலே பொங்கல்
வேட்டின் ஒலியினிலே
மாட்டு வெறிப்பகை நீட்டும் துமிக்கிகள்
மண்ணில் அதிரக் கண்டேன் !

பொங்கல் விழாக் கண்டேன் ! ஞாயிறு
போற்றும் புவி கண்டேன் !
செங்கதிர்ப் பரிதி எங்கள் இருள்வானில்
சிரித்தல் கண்டிலனே !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



விடுதலைப் புலிகளுக்கு உர மூட்டிய கவிஞரின் வீறு மிக்க பாடல்கள் இவை. தேனிசை செல்லப்பாவின் இசையமைப் போடும் குரலோடும் இப் பாடல்கள் இசைநாடாக்களாய் பதிவாயின.

## உலகத் தமிழினமே !

○

உலகத் தமிழினமே
 எண்ணிப் பார் !-நீ
உறங்கினால் வரலாற்றில்
 யார் உன்னை மன்னிப்பார் ?

எங்கேனும் உனக்கென்றோர்
 அரசுண்டோ காட்டு !-தமிழ்
ஈழப்போர் வென்றேனும்
 மானத்தை நாட்டு !

வாழ்கின்ற நாடெல்லாம்
 உனது தாய் நாடா ?
வாடகை வீடென்ன
 உன் சொந்த வீடா ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

ஆளாமல் அலைகின்றாய்...
ஆடா? நீ மாடா?
அடிமையாய் இருக்கின்றாய்
நீ கெட்ட கேடா?

விடுதலைப் புலிகள் போர்க்
களமாடும் வேளை
வீணாகத் தமிழ் மாந்தர்
கழிப்பதோ நாளை?

எடு கையில் நீயும் போய்
இன்றைக்கே வாளை!
ஈழத்தின் வேங்கைக்கு
கொடு வந்து தோளை!



## போர் இன்னும் ஓயவில்லை!

○

போர் இன்னும் ஓயவில்லை!
எங்கள் தமிழ்
ஈழ மண்ணில்
புலிகளின்
இரத்தம் இன்னும் காயவில்லை!

களத்தில்தானே நிற்கிறோம்!
எங்கள் கண்ணீரும்
செந்நீரும் தோய்ந்த
நிலத்தில்தானே நிற்கிறோம்!

எங்கள் வீரர் கல்லறை மீதில்
மாற்றான் கொடி பறக்குமா?-அவர்
தங்கத் தமிழீழம் காணவே செத்தார்
நெஞ்சம் அதை மறக்குமா?

விடுதலை காணும் நாள்வரை எங்கள்
துப்பாக்கி தூங்காது!-புலிக்
கொடியை ஏந்துவோம் ஒருநாள்! எங்கள்
குறிக்கோள் தப்பாது!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## திலீபன் அழைப்பது சாவையா ?

○

திலீபன் அழைப்பது சாவையா ?-இந்த
சின்ன வயதில் அது தேவையா ?
உலகம் இதை எண்ணிப் பார்க்குமா ?-இங்கே
ஒரு தமிழ் ஈழம் பூக்குமா ?

எரிமலை ஒன்று வெடிக்காதா ?-புயல்
எதிரிகள் வாழ்வை முடிக்காதா ?
பிரளயம் ஒன்று முளைக்காதா ?-எங்கள்
பிள்ளை இன்னுயிர் பிழைக்காதா ?

என்றுமே வாழ்வில் இனப் போரா ? இங்கே
இன்னுந்தான் தமிழர் இறப்பாரா ?
கொன்றிடும் கொடுங்கோல் வீழாதா ?-புலிகள்
கொடி இந்த மண்ணை ஆளாதோ ?

திலீபனின் உயிரை அழிப்பாரா ?- அவன்
செத்தபின் மாற்றார் பிழைப்பாரா ?
பழிவாங்கும் ஒருபோர் வெடிக்காதா ?-இங்கே
பாரதம் பாடம் படிக்காதா ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



## சொல்லில் அடங்காத கொடுமை!

○

சொல்லில் அடங்காத கொடுமை
சொல்லுகிறேன் கேளுங்கள்...

இரத்த மழையிலே
மூழ்குதடா எங்கள்
இன்னுயிர்த் தமிழீழம்!-தமிழ்
இனத்தை மறந்துவெறி
ஆடுதடா இங்கே
சிங்கள மதவேழம்!

கொடிய நெருப்பிலே
எரியுதடா தமிழ்க்
குலத்தின் குடியிருப்பு!-பார்
நெடிய பனைமரங்கள்
மேலும் எழுந்தோங்கி
நிற்குதடா நெருப்பு!

நடுத்தெருவில் வைத்தே
பிடித்துத் தமிழ்ப்பெண்ணைச்
கடித்து மகிழ்கின்றான்பாவி!- அட!
அடுத்த நொடியில் நஞ்சைக்
குடித்து மரணத்தில்
துடித்து விழுகிறாள் தேவி!



## தோழர்களே ! தோழர்களே !

○

தோழர்களே ! தோழர்களே ! கொஞ்சம்
பாரம் தூக்குங்கள் ! — நீங்கள்
வாழும் தமிழீழம் வாழ உங்களையும்
புலிகள் ஆக்குங்கள் !

பிரபாகரனின் நிழலில் கூட
நெருப்பு இருக்குது !— அந்த
நெருப்பில் நில்லுங்கள் உங்களுக்கும் ஒரு
பொறுப்பு இருக்குது !

நமது தந்தை நமது பாட்டன்
சுமந்த சுமை அல்லவா ?— அந்தத்
தமிழர் வழியிலே புலிகள் இன்றுநம்
கண்ணின் இமைஅல்லவா ?

இரத்த விதைகள் விதைத்துப் புலிகள்
வளர்த்த பயிர் காப்போம் !— புலிகள்
கரத்தைப் பலமாக்கி எதிர்த்து நமைமோதும்
பகைவர் உயிர் சாய்ப்போம் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## எங்கள் தோழர்களின் புதைகுழியில்..

○

எங்கள் தோழர்களின் புதைகுழியில்
மண்போட்டுச் செல்கின்றோம்...
இவர்கள் சிந்தியகுருதி – தமிழ்
ஈழம் மீட்பது உறுதி !

இளமை நாளின் கனவை எல்லாம்
எருவாய் மண்ணில் புதைத்தவர்கள் ! – போர்க்
களம் படைத்துத் தமிழ் இனத்தின்
கருத்தில் நெருப்பை விதைத்தவர்கள் !

வாழும் நாளில் எங்கள் தோழர்
வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம் !— எம்
தோழர் நினைவில் மீண்டும் தோளில்
துப்பாக்கிகளை அணைக்கின்றோம் !

தாவிப் பாயும் புலிகள் நாங்கள்
சாவைக் கண்டு பறப்போமா? கண்முன்
பூவாய்ப் பிஞ்சாய் உதிரும் புலிகள்
போன வழியை மறப்போமா ?



## ஆயிரம் ஆயிரம் படை வந்தாலும்...

○

ஆயிரம் ஆயிரம் படை வந்தாலும்
ஆட்கள் தொகையா வெல்லும்?
அறமும் வீரமும் வெல்லும் !
பாயும் புலிகள் விடுதலைப் போரில்
யார் பக்கம் தம்பி வெல்லும் ?
கண்ணி வெடி பதில் சொல்லும் !

கழுத்தில் நஞ்சைக் கட்டிய புலிகள்
களம் கண்டஞ்சிய துண்டா ?— எங்கள்
நிலத்தில் புலிகள் எதிரியை அடித்த
நிகழ்வு ஒன்றா இரண்டா ?

எங்கள் விடுதலை உணர்வை மண்ணில்
எந்தப் படை வந்து அழிக்கும் ! – அட !
பொங்கும் தமிழீழ மண்ணைத்தொட்டுப்பார் !
புலிப்படை உன்னைக் கிழிக்கும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## அடைக்கலம் தந்த வீடுகளே ...!

○

அடைக்கலம் தந்த வீடுகளே !
போய் வருகின்றோம் நன்றி !—நெஞ்சை
அடைக்கும் துயர்சுமந்து செல்கின்றோம்...உங்கள்
அன்புக்குப் புலிகள் நன்றி !

நாங்கள் தேடப்படும் காலத்தில் நீங்கள்
கதவு திறந்தீர்களே !—எம்மைத்
தாங்கினால் வரும் ஆபத்தை எண்ணிப்
பார்க்க மறந்தீர்களே !

எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா ?—நாங்கள்
தங்கி இருந்தநாள் சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா ?

பெற்றோரை உறவைப் பிரிந்திருந்தோம் அந்த
இடத்தை நிறைத்தீர்களே ...!—மாற்றார்
முற்றுகை நடுவில் முடிஎமை உங்கள்
சிறகால் மறைத்தீர்களே !



## போடா தமிழா போடா ...

○

போடா தமிழா போடா !
கரும்புலி மில்லர்
காட்டிய வழி நீ
போடா தமிழா போடா !

மோதி எதிர்த்து மலையாய் இருப்பினும்
மூச்சால் உடைக்கலாம் !
நீதி உயிர்வாழ உயிரை நீ விடு !
வெற்றி படைக்கலாம் !

நெல்லியடியிலே மில்லர் தன் சாவை
வண்டியில் ஏற்றிப் பறந்தானே!
பொல்லா வெறியர்கள் சாகத் தன்உயிரை
போக்கி மின்னலாய் மறைந்தானே !

வளரும் காலத்தில் வாழும் காலத்தில்
வசந்த காலத்தில் விழுந்த மரம் !
இளைய மாவீரன் மில்லர் சாவுதான்
இன்பத் தமிழீழம் கொண்டுவரும் !

பாயும் புலியாய் நீ மாறும் வாழ்வுதான்
பகைவர் கூட்டத்தை வெளியேற்றும் !
தாய்மண் வாழ நீ தாங்கும் சாவுதான்
தமிழன் என்றுன்னைப் பறைசாற்றும் !



## வெட்டி வீழ்த்துவோம் பகையே !

○

வெட்டி வீழ்த்துவோம் பகையே உன்னை
முற்று முழுதாக !-உன்
வெறித்தனம் பிறகு பலிக்காது !
விறகு தழைக்காது !

எங்கள் தமிழீழ மண்ணில் இனியும் நீ
எத்தனை காலம் இருப்பாய் !
பொங்கி எழுந்தது பாரடா எங்கள்
புலிகள் தாயகம் நெருப்பாய் !

துடித்துத் துடித்திங்கே நாங்கள் கண்ணீரில்
தோய்ந்து நாள்தோறும் அழவா ?
பிடித்துப் பிடித்து நீ சுடவா ? அட நாங்கள்
பிணங்கள் பிணங்களாய் விழவா ?

எந்த இடத்தில் நீ காலை வைத்தாலும்
இங்கே குண்டுகள் வெடிக்கும் !
வந்து பாரடா எங்கள் தாயகம்
வழியில் உன்னுயிர் குடிக்கும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## கோணமலை எங்கள் கோட்டை
○

கோணமலை எங்கள் கோட்டை !- திருக்
கோணமலை எங்கள் கோட்டை !
கொடுப் போமா எவன் கையிலும்
இந்த நாட்டை ?

பழந்தமிழன் குளக்கோட்டன்
அரசாண்ட மண்ணடா !
இழந்தால் இந்த மண்ணை - நீ
தமிழனா என்னடா ?

எந்தமிழ்த் தாயகத்தை
இழப்போமா ? பல் இளிப்போமா ?
சொந்தமண் இழந்தபின்னும் – அட
சோறுண்டு கொழுப்போமா ?
கொந்தளித் தெழுந்து போர்
ஆடாமல் வீட்டிலே
குந்திக் கிடந்துநாள் கழிப்போமா ?

தலைநகர் எவன் தொட்டாலும்
தமிழீழம் போர் தொடுக்கும் !
தலை தரும் நிலை வந்தாலும்
தமிழினம் தலை கொடுக்கும் !
தலைநகர் வாசலில் எதிரிகள் சடலத்தை
புலிப்படை எண்ணிக் கணக்கெடுக்கும் !



## ஓ! வீரனே!
○

ஓ ! வீரனே!
எங்கள் மண்ணில்
உன் பெயர்
எழுதி வைக்கப்படும் !

நீ மடிய வில்லையடா !
உன்கதை முடியவில்லையடா !

விடுதலைப் புலியாய் நீ வாழ்ந்த நாளை
வெடிகுண்டின் நடுவில் நின்ற உன்தோளை
அடி நெஞ்சில் நினைப்பவர்கள் ஆயிரமுண்டு !
அதோ பார் அவர் கையிலும் வெடிகுண்டு !

நீ மடியவில்லையடா !
உன் கதை முடியவில்லையடா !

ஓ ! வீரனே
எங்கள் மண்ணில்
உன் பெயர்
எழுதிவைக்கப்படும் !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நீ அடைந்த சாவு இங்கே உயிரானது!
நீ எறிந்த உயிர்விதை பயிரானது !
தீப்பிடித்து எதிரி முகாம் எரிகின்றது !
தீரனே ! உனது முகம் தெரிகின்றது !

நீ மடியவில்லையடா !
உன்கதை முடியவில்லையடா !

ஓ ! வீரனே !
எங்கள் மண்ணில்
உன் பெயர்
எழுதி வைக்கப்படும் !

காலமெல்லாம் புலிக்குகையில் நீ தங்கினாய் !
கண்முடி இன்று படமாய்த் தொங்கினாய் !
பூமாலை உன்படத்தில் போட்டார் பார்த்தோம் !
போட்டவரே நஞ்சுமாலை ஏற்றார் பார்த்தோம் !

நீ மடியவில்லையடா !
உன்கதை முடியவில்லையடா !

ஓ வீரனே !
எங்கள் மண்ணில்
உன் பெயர்
எழுதிவைக்கப்படும் !



## விடுதலைப் புலித் தங்கச்சி... !

○

விடுதலைப் புலித் தங்கச்சி !-உன்
வீர எழுச்சி தமிழீழப் புரட்சி !
விடுதலைப் புலித் தங்கச்சி !

கொடிய இருள் கிழித்த
ஒளிமின்னல் நெருப்பே !
அடிமைப் பெண் விலங்குடைத்த
புதிய பெண் பிறப்பே !

பெண்ணைப் பழித்த
கொடியவர் முன் பெண்ணின்
பெருமையை நிலை நாட்டினாய் !-எங்கள்
மண்ணை அழித்த
பகைவனை அழித்து நீ
மங்கையர் திறம் காட்டினாய் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

போரில் துப்பாக்கி
ஏந்தி நீ நடந்தாய் !
பூரிப்பில் நெஞ்சு சிலிர்த்தோம் !– குருதி
நீரில் கிடந்தாய் !
பார்த்தோம் ! புரட்சியின்
நெருப்பினில் நாங்கள் குளித்தோம் !

குழந்தைப் பருவத்தில்
கண்முன்னே அழகுக்
கொடியாய் நீ வளர்ந்தாயம்மா !-இன்று
எழுந்தாய் ! தமிழரின்
எதிரிகள் தலையில்
இடியாய் நீ விழுந்தாயம்மா!



## தாலாட்டுப் பாட மாட்டேன்...!

○

தாலாட்டுப் பாடமாட்டேன்...!
தமிழீழப் பிள்ளை என் பிள்ளை !
அவன்
தலை சாய்த்துத் தூங்க
இது நேரம் இல்லை !

எதிரியின் கொடிய
குண்டு வீச்சிலே
தொட்டில் எரிந்தது!
என்பிள்ளை விளையாடும்
முற்றத்தில் நின்ற
பந்தல் சரிந்தது !
உறங்கக் கூடாது
என் மகன் என்றொரு
உண்மை புரிந்தது !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

விடுதலைப் புலிகள்
போராடும் வேளை
மகனே தூங்காதே !
வீரமிலாப் பிள்ளை
இவனென்று கெட்ட
பேரை வாங்காதே !
நான் என்ன செய்தேன்
தாய்மண்ணுக் கென்று நீ
நாளை ஏங்காதே !

தாய் மனம் குளிரப்
பகைவனை என் பிள்ளை
இரு கையால் பிழிவான் ;
தாவி விடுதலைப்
புலிகள் கன்னத்தில்
முத்தங்கள் பொழிவான் !
விழித்தே இருப்பான்
என் பிள்ளை ! பகைவன்
இருப்பானா ? அழிவான் !



## பறக்குதடா யாழ் கோட்டையிலே....

○

பறக்குதடா யாழ் கோட்டையிலே
எங்கள் புலிக்கொடி !
பகைவனிடம் போய்ச் சொல்லுங்கள்...
'இதுதான் முதல் அடி !'

கோட்டை கோட்டையாய்
இனி விழும் !-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும் !

கொடிய பகைவர்கள் நெடுநாள் ஆண்ட
கோட்டையை நாங்கள் பிடித்தோம் !
இடியாய் வெடித்தோம்! கோட்டையில் இருந்த
எதிரிகள் கதையை முடித்தோம் !

கோட்டை கோட்டையாய்
இனி விழும் !-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

குண்டுகள் வானில் அள்ளிக் கொட்டினாய்...
கொடியவனே என்ன கண்டாய் ?
சண்டையில் பார்த்தோம்...கோட்டையில் உன்னுடல்
சரிந்தது துண்டு துண்டாய்

கோட்டை கோட்டையாய்
இனி விழும்! -புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும் !

எதிரி கோட்டையை மக்கள் படைஇங்கே
இடித்துத் தூளாக்கிப் போடும் !
புதிய தமிழீழ மண்ணில் தமிழனின்
புலிக்கொடி ஒன்றே ஆடும் !

கோட்டை கோட்டையாய்
இனி விழும் !—புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும் !



## நெஞ்சம் மறக்குமா ?

○

நெஞ்சம் மறக்குமா ?
நெஞ்சம் மறக்குமா ?
நெஞ்சம் மறக்குமா ?

வல்வெட்டித் துறையில் நாங்கள்
வளர்த்த சிதை நெருப்பில்
பன்னிரெண்டு புலிகள் ஒன்றாய்ப்
படுத்ததை நெஞ்சம் மறக்குமா ?

குமரப்பா புலேந்தி
அப்துல்லா ரகு நளன் பழநி
மிரேஸ் ரெஜினால்ட் தவக்குமார்
அன்பழகன் கரன் ஆனந்தக்குமார்...

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

எங்கள் தலைவர்கள் எங்கள் வீரர்கள்
இவர்கள் அல்லவா ?
கண்கள் மூடி எங்கள் புலிகள் மாண்ட
கதையைச் சொல்லவா ?
தங்கத் தமிழீழ விடுதலை காண
நெஞ்சம் துடித்தாரே !
சிங்கள இந்திய அரசுகள் சதியால்
நஞ்சைக் குடித்தாரே !

ஈழத் தமிழன் தமிழீழக் கடலில்
போனால் பிடிப்பாராம்...
இந்திய உதவி கொண்டே தமிழனின்
வாழ்வை முடிப்பாராம்...
ஆழக் கடலில் போன புலிகளை
பிடித்துச் சென்றாரே...
அழகும் இளமையும் பொங்கும் வயதில்
துடிக்கக் கொன்றாரே...



## மக்களெல்லாம் மக்களெல்லாம்...

○

எங்கள் தலைவன் பிரபாகரன் என்று
முழங்கு சங்கே முழங்கு ! —அவன்
பொங்கி எழுந்தான்... பொடிப்பொடி ஆகி
உடைந்தது பார் கைவிலங்கு !

மக்களெல்லாம் மக்களெல்லாம்
பிரபாகரன் பக்கம் !
மக்கள் படை என்றைக்கும்
அவன் பக்கம்தான் நிற்கும் !

இளவேங்கை அவன்மலைத் தோள்
தமிழ் வீரம் படைக்கும் !
எமை எதிர்ப்போர் முதுகெலும்பை
புலிப்படைதான் உடைக்கும்!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

அவன் வாழும் காலத்தில்தான்
தமிழீழம் பிறக்கும் !
ஆளும் தமிழர் கொடி ஒன்று
உலகத்திலே பறக்கும் !

நம் தலைவன் அவன் பிறந்தான் !
விடிவு இனிக் கிடைக்கும் !
நாளை இந்த உலகத்திலே
நாம் நினைத்தது நடக்கும் !

## பாரதமே ! பாரதமே !



அமைதிப்படை என்னும் பேரில் தமிழீழ மக்களை இந்தியப்படை அழிக்க முனைந்தபோது— 1988இல் கவிஞர் மனம் நொந்து பாடிய பாடல்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

## பாரதமே ! பாரதமே !

○

பாரதமே ! பாரதமே !
படை எடுத்தாய்... சரிதானா ?
ஓர்துணை நீ என்றிருந்தோம்...
உயிர் பறித்தாய்... முறைதானா ?

சிங்களவன் சுட்ட வடுச்
செங்குருதி காயுமுன்
எங்களை நீ சுட்டாய்...
ஏன் சுட்டாய் ? ஏன் சுட்டாய் ?

நேற்று வரை எங்கள்
நிலங்காத்த புலிகள் உயிர்க்
காற்றைப் பறித்தாயே...
கனல் மூட்டி எரித்தாயே !

காலி வெறிமாட்டைக்
களனியிலே வீழ்த்தாமல்
வேலியை நீ வீழ்த்த
விழைந்தசெயல் கொடியசெயல் !



சீறிக் குதிக்கவும்
செந்தமிழர் மண்ணை நீ
ஏறி மிதிக்கவும்
என்ன பிழைசெய்தோம் ?

குழந்தை எழில்மேனி
குண்டுகளால் ஏன்கொன்றாய் ?
இளந்தமிழ் வஞ்சி உடல்
எச்சில்பட ஏன்தின்றாய் ?

கைகொடுப்பாய் நீயென்று
காத்திருந்த தமிழ்மகனின்
கையெடுத்தாய் காலெடுத்தாய்
கதறுகிறான் கண்டாயா ?

அண்டை நாடெம்மை
அரவணைக்கும் என்றிருந்தோம் !
மண்டை சிதற எங்கள்
மண் சிவத்தல் பார்த்தாயா ?

'காலில்லை ! தலையில்லை !
கண்ணில்லை ! மூக்கில்லை !
ஆளில்லை !' என்றூரார்
அழுமோசை கேட்டாயா ?

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

சோறு கொடுத்துச்
    சுவைக்குமுன் தமிழருடல்
கூறுபடக் கிழித்துக்
    கொன்றமனம் கொடியமனம் !

பாரதமே ! பாரதமே !
    உன்னகத்தா புத்தனெனும்
மாமனிதன் வாழ்ந்தான்...
    மனம் ஒப்ப மறுக்கிறதே !

உண்மைப் பழங்காந்தி
    ஒருகால மகான் காந்தி
தன்னைக் கருத்தரித்த
    தாய்வயிறு நீதானா ?

எத்தனை கொடுமை
    இழைத்தாய்...ஓ ! பாரதமே !
சித்தம் திறந்துசொல் ! நின்
    சீற்றம் சரிதானா ?

எல்லை கடந்தாய் நீ...
    எம்மை அழித்தலே
கொள்கை எனநின்றாய் !
    கொன்றாய் ! எழுகின்றோம் !





தாயகம் காத்த
    தமிழ்ப்புலிகள் நெஞ்சில் நீ
போய் விழுந்தால யாரதான்
    பொறுப்பார் ? புயலெழும்பார் !

எண்ணிக்கை சிறிதெனினும்
    எம்பால் அறமுளதால்
மண்ணில் யாம் வெல்வதும்மெய் !
    மலை நீ விழுவதும் மெய் !

பாரதமே ! பாரதமே !
    பாரில் நேர் இணையில்லாப்
போரணி நீ என்றாலும்
    பொத்தென்று விழுவாய் பார் !

உன்நெஞ்சே உன்னை
    உறுத்தும் ! தமிழீழம்
தன்னை மிதித்தகால்
    தானாக ஊர்திரும்பும்...

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



விடுதலைப்புலிகள் மீது இந்திய அமைதிப்படை தொடுத்த போர் வேண்டப்படாத-தவிர்த்திருக்கக்கூடிய-அநீதியான முறையில் தமிழீழத்தின் உண்மையான பாதுகாவலர்கள்மீது திணிக்கப்பட்ட போர் என்பதே கவிஞர் கருத்து. இந்தியாவுக்கு தமிழீழ மக்களும், விடுதலைப்புலிகளும் என்றும் உறுதுணையாக இருப் பார்கள் என்பதும், இந்தியா தமிழீழப் போருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்பதுமே அவரது இன்றைய நிலைப்பாடாகும். அந்த உணர்வின் வெளிப்பாடே இக்கவிதை.



## புலிகளை நண்பராக்கு!

○

இந்திய அரசே ! வா நீ !
   இனியேனும் புலிகள் பக்கம்
வந்துநில் ! அறத்தைக் காப்பாய் !
   வா ! புது வழியில் கால் வை !
முந்திய கொள்கை மாற்று !
   முழுநாளும் களத்தில் செந்நீர்
சிந்துவார் புலிகள் பக்கம்
   சேர்வதே நீதி ஆகும் !

நேற்று நீ பிழையே செய்தாய் !
   நின்படை எங்கள் மண்ணில்
ஏற்றினாய்... ! குண்டெறிந்தாய் !
   ஏனோ நீ எமை அழித்தாய் !
ஆற்றலின் புலிகள் வீரம்
   அறிந்தாய்! பின் நாடு மீண்டாய் !
போற்றி வா புலியை ! எங்கள்
   போருக்கு வந்து தோள் தா!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தோள் என்றால் துணை என்றாகும் !
    துமிக்கி கொண்டெங்கள் மண்ணில்
கால்வைக்க வேண்டா ! தாய்மண்
    காக்க எம் படையே போதும் !
நாள் குறி விடுதலைக்கு !
    நண்பனாய் எம்பக்கம் வா!
ஆல்மர விழுதாய் நிற்பாய் !
    அது போதும்! துணைதான் தேவை !

உன்னையே நட்பாய் எண்ணி
    உயிர்வாழ்ந்தார் தமிழீழத்தார் !
அந்நாடு புலிகள் காத்தார் !
    அறிந்தும்போய் மோதினாய் பார் !
முன்னையப் பிழை திருத்து !
    முற்றிலும் உன்னை நட்பாய்
இன்னமும் நினைப்பார் பக்கம்
    இரு ! புலிப் படையைத் தாங்கு !



வீரத்தின் வங்க நாடு
    விடுதலை பெறத்தோள் தந்தாய் !
தீரத்தர் பாலத் தீனர்
    சிறை விழக் குரல் கொடுத்தாய் !
தூரத்தின் ஆப்பிரிக்கம்
    துணை கேட்கத் துணைநீ போனாய் !
ஓரத்தில் உன்பக்கத்தில்
    உள்ளோரை அணைத்தால் என்ன?

ஏற்றுநில் தமிழீழத்தின்
    இறைமையை ! விடுதலையை !
சாற்றுநீ 'புலிகளின் போர்
    சரி' என்று திசைகள் எட்டும் !
ஊற்று செந் தமிழீழத்தின்
    உயிர்வேரில் புதிய தண்ணீர் !
போற்றுக நீதி ! இன்றே
    புலிகளை நண்ப ராக்கு !

முன்னாள் நீ அமைதி காக்க
    முயல்வதாய்ச் சொன்னாய்...வந்தாய் !
பின் நாடு திரும்பினாயே...
    பிறந்ததா அமைதி? கூறு !
பன்னூறு குண்டெடம் மண்ணில்
    பாய்ச்சினார் இன்றும் தீயர் !
தன்னாடு பெறப் போராடும்
    தமிழீழப் புலியை வாழ்த்து !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



தாயகத்தைப் புகழ்ந்து
கவிஞர் புனைந்த
தமிழீழப்பா.



## தமிழீழம்

○

இன்னுயிர்த் தமிழீழம்
    தன்னேரி லாத்தமிழ்
        இருந்த நாடு !
முன்முதல் முளைகொண்ட
    தமிழினம் மூச்சோடு
        வாழ்ந்த நாடு !
தென்னாடெனும் தமிழ்
    நாட்டுக்குத் தென்னாடு !
        குமரி நாடு !
பன்னூறாயிரமாண்டு
    மண்ணாண்டு வரலாறு
        படைத்த நாடு !

முப்புறம் கடல்சூழ
    ஓர்புறம் முகில்போலும்
        உயர்ந்த காடும்
சிப்பிகள் போல் நிற்கும்
    சிறுமலைக் குன்றுகள்
        சிலவும் சூழ
எப்புறம் நோக்கினும்
    வளம்சூழ எழில் சூழ
        இதற்கு மண்ணில்
ஒப்பிலை எனப்புவி
    செப்பிடப் புகழ்சூழ
        ஒளிரும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கதிர்வெட்டும் போதன்றிக்
குனியாத உடலொன்றும்
கற்றறிந்த
மதிமிக்கார் முன்னன்றிப்
பணியாத நெஞ்சொன்றும்
மலையே நேரில்
எதிர்நின்று பொருதாலும்
வளையாத தலையொன்றும்
இடிவீழ்ந்தாலும்
அதிராத திடமொன்றும்
இயல்பாகி வாழ்வாகி
அமைந்த நாடு!

வானத்தை உயர்வென்று
கூறுவார் வையத்தார்!
ஆனால் என்றும்
மானத்தை உயர்வென்று
கருதுவார் மதிப்பார்காண்
தமிழீழத்தார்!
ஈனத்தைக் கொஞ்சமும்
பொறுத்திடார்! களம்காண்பார்
இளைஞர்! மேனி
ஊனத்தை அடைந்தாலும்
செத்தாலும் உயர்மானம்
பேணும் நாடு!



கோலமாய் எழில்கொஞ்சும்
ஞாலமாய்த் தமிழீழம்
கொழுத்து நிற்கும்!
நீலமாய்க் கடல் நிற்கும்!
பச்சையாய்ப் பொழில்நிற்கும்!
நிறத்த மஞ்சள்
சோலையாய் வயல்நிற்கும்!
தமிழீழம் நிறங்களாய்ச்
சொரிந்து நிற்கும்!
பாலையாய் இல்லாமல்
நானிலமாய் மட்டும்
பழுத்த நாடு!

நெய்தல் இளம்பெண்ணாள்
கடலாடை நீலத்தில்
கட்டி வெள்ளைக்
கொய்தகம் அலையினால்
இடையிலே செருகுவாள்...
தாழைக் கூந்தல்
வெய்யிலில் உலர்த்துவாள்...
எழில்காட்டி விழிகளை
மயக்கி வைப்பாள்!
தையலாள் நெய்தலாள்
வெறியூட்டும் மையலால்
தவிக்கும் நாடு!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நாடிபோல் அழகான
படகுகள் அலையேறி
நடக்கும் ! சட்டி
முடிபோல் அழகான
நண்டுகள் விளையாடும் !
முரல்மீன் பாயும் !
பாடிபோல் வீரர்கள்
வரிசைபோல் தென்னைகள்
படை இருக்கும் !
மாடிமேல் உட்கார்ந்து
மீன்பிடிப் போர் நிலா
மகிழும் நாடு !

காலைப் பொன் ஒளிக்கதிர்
ஆழித்தா மரை எனக்
கண்முன் தோன்றும் !
மூலைக் கடற்கரை
அடம்பன் கொடிப்புதர்
முயல்கள் மேயும் !
வாலைக் கரும் பாம்பு
போலாட்டிப் பட்டங்கள்
வானில் ஏறும் !
நாலைப் போலே காலை
வைத்து நாரை நிற்கும்
நெய்தல் நாடு !



பிறை நிலா மீசைவைத்
தாற் போல் இறால்களும்
பெரிய மீனும்
அறுபட்ட கயிறுபோல்
அட்டையும் பிடியற்ற
அகப்பை போலும்
நிறை தசை மட்டியும்
அடை பேணித் தீனியாய்
நிரப்பும் ஆலை
தொறுமெழும் சங்கோசை
கடலோரம் செவிதோய
முழங்கும் நாடு !

பெண்ணார் பொன் உடலெழில்
பெருக்கும் இயல்பினார்
பேச்சில் மூழ்கி
இன்னார் இன்னாருக்குத்
தகும் நகை இதுவென
இயம்பும் காலை
எண்ணார் எவ் வூரையும் !
மணிவாயின் இதழ் தூக்கி
அழகு வெள்ளை
மன்னார்க் கடல்முத்தே
முத்தென்று நெஞ்சம்
மயங்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

செந்தமிழ் ஈழத்தின்
மருதத்தைப் பாடச்செந்
தமிழும் உண்டோ ?
எந்தச்சொல் பொருந்தும் என்
றேங்குவார் பாவலர்
எழில் வரப்பில்
குந்துவார்... 'அடடாவோ !'
என்பார்...பசும் வயல்
எழில் குளிப்பார் !
தந்தனத் தனதான
என்பார்...தமிழ் தேடித்
தவிப்பார் நாடு !

கார்வானின் மழை இங்கே
குளம் பார்க்கும் ! குளத்து நீர்
கழனி பார்க்கும் !
நீர்பார்க்கும் கழனியோ
உணவாகி நிறைவுற்றோர்
மகிழ்வு பார்க்கும் !
ஏர் பார்க்கும் மருதத்தால்
தமிழீழம் எவனையும்
நிமிர்ந்தே பார்க்கும் !
யார் முன்னும் யாரேனும்
கரமேந்தி யார்கண்ணும்
பாரா நாடு !



வாய்க்கால் நீர் வயலேறி
உழுவை மீன் வரப்பேறிப்
பாய்வ துண்டு !
காய்ப்பலா உருண்டாற்போல்
பன்றிகள் கழனிக்குள்
மேய்வ துண்டு !
'கூய்'க் காட்டிப் பறவைகள்
ஓட்டுவார் குரலில் மண்
தோய்வ துண்டு !
தாய்ப்பால் போல் அமுதூட்டித்
தமிழ் மண்ணைப் பிள்ளைபோல்
தாங்கும் நாடு !

இரணை மடுக்குளம்
கடல் போல் இருத்தலால்
நெய்தல் தோன்றும் !
முருகெழில் நெல்வயல்
காடெனக் கொழுத்தலால்
முல்லை தோன்றும் !
கரவாகு மூடை நெல்
மலையே போல் குவிதலால்
குறிஞ்சி தோன்றும் !
மருதமா நிலம் நான்கு
நிலமாயும் உருமாறி
மயக்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

ஈடிலா ஒந்தாச்சி
மடத்து வெண் கலப்பானை
அடுப்பி லேற்றி
முடி அவித்த கைக்
குத்தரிசிச் சோறாம்
அமுதத் தோடு
தேடி மட்டிறால் வாங்கி
ஆணம் சமைத்துத் தாம்
தின்ற பின்னே
மாடியில் உழவர்கள்
தயிர்ச்சோறு பூனைக்கு
வைக்கும் நாடு !

நெல்வயல் உழுபொறி
வண்டிகள் ஒலிநிலம்
எங்கும் கேட்கும் !
நல்லறு வடை நாளில்
நெல்குத்தும் நகராலை
ஓசை கேட்கும் !
பல்வகை நெல்மணிப்
பொதிவண்டி ஒலிபத்துத்
திசையும் கேட்கும் !
எல்லோர்க்கும் எல்லாம் என்
றிருப்போர் தம் சிரிப்போசை
கேட்கும் நாடு !



எண்ணம் பறிப்பதும்
கவர்வதும் வண்ணப்
பசுங் காடல்லோ !
கண்தொடும் மரகதக்
கொல்லையல்லோ ! எழில்
முல்லையல்லோ !
மண்மிசை காட்டின் வேர்
மழையல்லோ ! மழையின்வேர்
காடே அல்லோ !
விண்தொடும் காடுகள்
முல்லை எழில் மண்ணாய்
விளைந்த நாடு !

அணிலொன்று மான்கொம்பு
மரமென்று கருதி அக்
கொம்பில் தாவும் !
கனியொன்று கிளிவாயைப்
புறாக் கவ்வும் ! குரங்கின்வால்
கரும் பாம்பென்று
துணிவொன்றும் இல்லாத
குயில் கத்தும் ! நீரில்தன்
தோற்றம் கண்டு
தனிநின்ற புலிபெட்டைப்
புலியென்று தடுமாறிக்
குழம்பும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

வான்முகில் இடைப்பிறை
நிலவுபோல் யானைவாய்த்
தந்தம் தோன்றும் !
தேன்கூடு செவ்வாழைக்
குலைகாட்டும் ! நெடுஞ்செவி
முயல் தெறிக்கும் !
தீன்தேடும் கரடி தன
இரு காலில் மனிதன்போல்
திரிவதுண்டு !
மேனிசிலிர்த்த முள்
எம்பன்றி புல்மேயும்
முல்லை நாடு !

ஓங்குயர் கருங்காலி
முதிரை மரம்வெட்டி
ஓவியங்கள்
தாங்கு கலைப் பொருள்
செய்வார் தச் சோவியர்
கலைவளர்ப் பார் !
ஏங்குவார் உலகினர் !
'இதுவன்றோ கலைச்செல்வம்'
என்பார் ! தேடி
வாங்குவார் ! காடெல்லாம்
கலையாகிப் புவிநெஞ்சை
வாங்கும் நாடு !



மன்னார்ப் புறக்காடும்
தேனாட்டின் பசுங்காடும்
மனம் பறிக்கும்
வன்னிக் காடும் முல்லைத்
தீவின் நெடுங்காடும்
மாற்றான் எல்லை
தன்னில் மதில் போட்ட
கோண மலைக் காடும்
தழைத்துப் பார்ப்போர்
'என்னே! என்னே! இதன்
அழகெ'ன்று புகழ்ந்தேற்ற
இருந்த நாடு !

எழிலான தமிழீழ
மண்ணின் தென் எல்லையில்
குன்றிருக்கும் !
விழி மூடும் புருவம் போல்
மலை மேடு வளைவோடு
நின்றிருக்கும் !
வழி தோறும் நெஞ்சத்தில்
தமிழ்பாய்ச்சும் எழில் வளம்
ஒன்றிருக்கும் !
பொழி தென்றல் தாலாட்டும்
பிள்ளை என்றிருக்கும் பொற்
குறிஞ்சி நாடு !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

சின்னக் குறிஞ்சியில்
கதிர் மின்னும் தினைக்காடு
சிரிக்கும் அம்மே !
தென்னை ஓலைத் தோகைப்
பொன்மயில் கூத்தாடித்
தெறிக்கும் அம்மே !
உன்னி உடும்பு கல்
உராய்ந்து உடற்சோம்பல்
முறிக்கும் அம்மே !
இன்னெழில் இயற்கையின்
கைவண்ணம் மண்தொறும்
இருக்கும் நாடு !

விரிபுகழ் உகந்தையும்
விசாரையும் தாந்தாவும்
வெருகற் கல்லும்
குறிய புல்மலை மேடும்
விற்பனை மடுக் கோடும்
குடுமிக் குன்றும்
திருமலைக் காடு சூழ்
மலைகளும் இருவிழி
தெரிய நின்று
சிறிய எழில் வண்ணக்
குறிஞ்சியின் சீர்காட்டிச்
சிரிக்கும் நாடு !



உண்டென்ற சொல் ஒன்றே
உண்டென்பார் இம்மண்ணில்
எல்லாம் உண்டாம் !
பண்டங்கள் மிக உண்டாம் !
உணவுண்டாம் ! அடுப்பெல்லாம்
பானை உண்டாம் !
உண்டு வாழ்வார் மட்டும்
உண்டாம் ! பசித்திடார்
வாழ்வே உண்டாம் !
கண்டவர் முகமெல்லாம்
சிரிப்புண்டாம் நிறைவுற்றுக்
கனிந்த நாடு !

வல்வையின் புண்ணாக்கு
பருத்தித் துறை வடை
வாகரைத் தேன்
கல்லாற் றிறால் கூனி
பெருங் களுதாவளை
வெற்றிலைகள்
வெல்லா வெளித் தயிர்
திருமலைக் கணவா மீன்
மண்டூர்க் கீரை
நல்லரும் சாவகச்
சேரிப் பலா நாவில்
சுவைக்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நண்டிருக்கும் நல்ல
இறாலிருக்கும் மீனை
நறுக்கி வைத்த
துண்டிருக்கும் பலாக்
கொட்டை இருக்கும் தூள்
மிளகாய்க் காரம்
கொண்டிருக்கும் புளி
உப்பிருக்கும் யாழூர்
ஒடியல் கூழை
உண்டிருக்கும் சுவை
கண்டிருக்கும் வாழ்வொன
றுடையார் நாடு !

சீராளைக் கோட்டையின்
நல்லெண்ணெய் சட்டியில்
சிறுக ஊற்றி
பேர்போன வேப்பம்பூ
வடகத்தைப் பொரித்துப்பின்
இறக்கி வைத்து
கார வட்டக் கச்சி
மிளகாய்ப் பொரியலும்
கலந்து சோற்றை
ஊர்மக்கள் சுவையோடு
வாயூற உண்டுள்ளம்
சுவைக்கும் நாடு !



உன்னிச்சைக் குள நீரில்
தூண்டிலில் உழுவைமீன்
பிடித் தறுத்து
வெந்நீரில் சுடக் காய்ச்சி
மணப்பாக்கித் திராய்க்கீரை
விட்டுச் சுண்டி
சின்ன வெங்காயத்தில்
ஒரு கீறும் சேர்த்துச் சோ
றோடு தின்பார்
என்னத்தைச் சொல்ல
எதைச்சொல்ல என்றுவாய்
புலம்பும் நாடு !

பெரிய வன்னிக் காட்டின்
மாம்பழம் பழஞ்சோற்றில்
பிழிந்து வைப்பார் !
கருகம் பானைப் பனங்
கட்டியும் கூடவே
கலப்பார் ! மேலும்
உரிய சுவைகாணப்
பரந்தன் உப்புக்கல்லில்
நாலு சேர்ப்பார் !
அருமை அருமை என்பார் !
வாயின் அறுசுவை
உடையார் நாடு !

ஓயாத உழைப்பினால்
உணவினால் உடல்நலம்
உடையார் கண்டீர் !
காயாத உடல்நலம்
உடையதால் மனநலம்
உடையார் கண்டீர் !
தேயாத மனநலத்
தால் காதல் திகழ்வீரம்
உடையார் கண்டீர் !
சாயாத பண்பாடொன்
றுடையார் கண்டீர் ! சான்றோர்
இருந்த நாடு !

ஒருவனுக் கொருத்திதான்
ஒருத்திக்கும் ஒருவனே
என்னும் கொள்கை
குருதியாய் உயிர் மூச்சாய்
உடையவர் அன்பொன்றே
வாழ்வாய்க் கொள்வார் !
எருமைபோல் பன்றிபோல்
நாயைப்போல் எண்பதைத்
தழுவ மாட்டார் !
பெரு நெஞ்சின் காதலை
இருநெஞ்சின் இடைமட்டும்
பெருக்கும் நாடு !



ஆணும் பெண்ணும் சமன்
என்பதால் அடுப்போரம்
ஆணும் நிற்பான் !
பூணும் வீரம் பொது
என்பதால் களப்போரில்
பெண்ணும் நிற்பாள் !
காணும் அனைத்திலும்
ஒன்றெனக் கலந்துயிர்
பின்னி நிற்கும்
வானும் நிலாவும் போல்
ஆனவர் காதலர்
வாழும் நாடு !

வேலிக்குள் பெண்வாழ
ஆடவன் வெளிவாழும்
நிலை இங்கில்லை !
கூலிக்குள் வாழ்வார்போல்
விலைபேசி மணங்கொள்வார்
கொடுமை இல்லை !
தாலிக்குள் வாழ்வென்பார்
பெண்ணுக்கே தளை என்பார்
தாழ்வும் இல்லை !
போலிக்குள் பொய்மைக்குள்
காதலைப் பொசுக்காதார்
இருந்த நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நெட்டைப் பனைமரத்
தோப்பில் நெடுநேரம்
தனியே நின்று
பெட்டை அனுப்பிய
கடிதம் பிரித்துப்
பிரித்துப் பார்ப்பான்...
கட்டை உடைத்தெழும்
காதலால் ஓடித்தன்
துணையைக் கோழிச்
செட்டை நுழையும்
இளங்குஞ்சு போல் சேர்வான்...
அன்பின் நாடு !

கல்லடிப் பாலத்தில்
உப்பேரிக் கயல்பாடும்
முழு நிலாவில்
சில்லென்ற குளிர்காற்றில்
தோணியில் காதலர்
சிரிப்பும் பேச்சும்
மெல்லவே எழும் ! தோணி
ஏரியின் அலைமேனி
தழுவி ஆடும் !
சொல்லின் வசப்படாக்
காதலின் சுவைபொங்கிப்
பாயும் நாடு



அப்பு குளித்துக்கொண்
டிருப்பார்... எதிர்வீட்டில்
இருக்கும் அத்தான்
துப்புமாப் போல் வந்து
வேலியால் தலை தூக்கி
மெல்லப் பார்ப்பான்...
'சுப்பு ! நலந்தானா ?'
என்பாள் ! அப்பன் தும்மல்
உள்ளே கேட்கத்
'தப்பு நீ ! ஓடித்தப்
படி !' என்பான் ! களவின்பம்
தாங்கும் நாடு !

காளை பனை ஏறும்
எழில்காண உழவர் பெண்
கண்ணும் ஏறும் !
பாளை அவன் தட்டத்
தட்ட இவள் நெஞ்சில்
பனங்கள் ஊறும் !
வேளை தோறும் காதல்
வளரும் ! அவன் நெஞ்சம்
எல்லை மீறும் !
'காளை நாளை' என்று
பெண்கூறும் மணம் நடந்
தேறும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தாய்மண்ணின் வாழ்வுக்கோர்
தீங்கெனில் தம்சொந்த
வாழ்வை எண்ணார் !
தூயதம் உறவெண்ணார் !
முத்தம் எண்ணார் ! இன்பம்
தோய்தல் எண்ணார் !
ஓய்வெண்ணார் ! புறவாழ்வே
அன்றி ஓர் பொழுதேனும்
அகவாழ் வெண்ணார் !
தீயெனக் கிளம்புவார்!
உயிர் பெரிதென் றெண்ணார் !
தீரர் நாடு !

எண்டிசை வென்றவன்
ஆற்றலன் எல்லாளன்
சண்டை நூறு
கண்டவன் குளக்கோட்டான்
சங்கிலி பண்டார
வன்னி வேந்தன்
துண்டு துண்டாய்ப்பகை
சாய்த்தவள் மறப்பெண்டு
நல்ல நாச்சி
வண்டமிழ் மண்வாழ
மறம் காத்துப் புகழ்கொண்ட
பண்டை நாடு !



நஞ்சைக் கழுத்தினில்
மாலையாய் ஏற்றவர்
நாடு பொங்கப்
பிஞ்சுக் கரத்தினில்
குண்டேந்திப் பகையுடல்
பிளக்கும் வீரர்
நெஞ்சைத் தமிழ்மண்ணில்
தோய்த்தவர் புலிப்படை
நிரையின் தோழர்
மிஞ்சு புகழ்வாங்கி
நின்றவர் மெய்சிலிர்த்
துலாவும் நாடு !

நற்றமிழ் ஈழமண்
அழிவு பெற்றிட நரிச்
சிங்களத்தார்
சுற்றி வளைத்தநாள்
வரலாற்றின் ஒற்றைகள்
சூடு கொள்ளக்
குற்றம் இழைத்தசிங்
களத்தார் கொடும்படைக்
கும்பல் முற்றும்
பற்றி அழித்தவன்
பிரபாகரன் வெற்றி
படைத்த நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

விண்நின் றடிக்கும்
பகைவர் விண்ணூர்தி வீழ்ந்
துடையச் சாய்ப்பார் !
தண்ணீர்க் கடல்வரும்
மாற்றார் கலம் தாக்கி
மூழ்கடிப்பார் !
மண்ணில் உலாஎழும்
எதிரிகள் படைவண்டி
மடக்கிப் பேர்ப்பார் !
கண்ணி வெடிக்குப் பேர்
போனவர் கரந்தடிப்
படைஞர் நாடு !

ஏட்டினில் மென்கரம்
எனநின்ற பெண்கரம்
துமிக்கி ஏந்தும் !
பாட்டினில் கொடியிடை
எனநின்ற பெண்இடை
குண்டு தாங்கும் !
வீட்டினில் நாணத்தால்
மண்பார்த்து நின்றகண்
தாய்மண் பார்க்கும் !
காட்டினில் பெண்புலிப்
படைதிசை நான்கிலும்
நடக்கும் நாடு !



பொங்கு வெறிக்கடல்
அலையில் கடற்புலிப்
படகு போகும் !
எங்கு மாற்றார் கலம்
எதிர்ப்படினும் எறி
கணைகள் பாயும் !
அங்கும் இங்கும் துகள்
சிதறப் பகைக் கலம்
அடிநீர் மூழ்கும் !
செங்குருதிக் கடல்
குளித்துத் தமிழ்வீரர்
சிரிக்கும் நாடு !

நெடுவானில் தமிழீழ
வான்படை விண்ணூர்தி
நின்று சுற்றும் !
கடல் நீரில் தமிழீழ
மண்காக்கும் நீர்மூழ்கி
காவல் செய்யும் !
இடுகுறி தவறாமல்
தமிழீழம் விடும் ஏவு
கணை பறக்கும் !
உடல் புல்லரிக்கும்
பெரும்படை ஆற்றலொன்
றுடையார் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நாடுகொள்ளும் நோக்கில்
எவன் படை வந்தாலும்
இந்த நாட்டில்
வீடுகள் சுடும்! தமிழ்
வீதிகள் சுடும்! மண்ணின்
வீர வாழ்வு
பீடு கொள்ளும் வண்ணம்
வான் சுடும்! கடல்! சுடும்
பிணங்கள் வீழக்
காடுகள் சுடும்! நெல்லின்
கழனிகள் சுடும்! வீரர்
காவல் நாடு!

பொங்கு மறங் கொண்டு
தமிழ் வாழ்வின் புறங்கொண்டு
பொலிந்த மண்ணில்
எங்கணும் ஒளிகொண்டு
கோணமாமலை களி
கொண்டு நிற்கும்!
செங்கதிர் இயல் கொண்டு
கார்கொல்லும் செயல்கொண்டு
மண்ணை ஆளும்
சங்கொலி கொண்டுமா
வலிகொண்டு தலைநகர்
திகழும் நாடு!



சீரெழில் அரண்மனை
போல் நிற்கும் தலைநகர்!
வளைத்து நிற்கும்
பேரரண் வேலி போல்
மலை நிற்கும்! பின் நிற்கும்
அகழியே போல்
நீரலை எறிகடல்
நீளமாய் ஆழமாய்
நிலைத்து நிற்கும்!
பாரினர் 'இது தலை
நகர்' எனப் புகழ்பாடி
நிற்கும் நாடு!

எந் நாட்டிலும் கடல்
மண் மேட்டில் நண்டுதான்
இருக்கு மென்பார்...
இந்நாட்டின் தலைநகர்
ஆழி வெண் கரையோரம்
மான் குதிக்கும்!
எந்நாட்டிலும் மண்ணை
வெட்டினால் தண்ணீர்தான்
கிடைக்குமென்பார்...
கன்னியா மண்ணையாம்
வெட்டக் கனல் வெந்நீர்
சொதிக்கும் நாடு!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பாசிக் குடாக் கடல்
போல் நிலா வெளிக்கடல்
பாரை ஈர்க்கும் !
பேசிப்பேசிக் களிக்
கும் வண்ணம் மலைக்கோட்டை
மகிழ் பெருக்கும் !
வீசி நாற் றிசை பாயும்
கந்தளாய் நீர்மண்ணின்
வளம் விரிக்கும் !
மாசிலாப் புகழ்நகர்
கோணமா மலை திகழ்
மாண்பின் நாடு !

கல்லிருக்கும் கீரி
மலைக்குளம் களிப்பர் காண்
யாழூர் மக்கள் !
நல்லெழிற் பாலாவிக்
குளமாடல் நன்றென்பார்
மன்னார் மக்கள் !
அல்லிவாழ் அமிர்த
களிக் குளம் ஆடுவார்
தேனூர் மக்கள் !
வில்லுக் குளம் தோய்தல்
கோணமா மலைமக்கள்
விரும்பும் நாடு !



நீரெழில் ஆழிப்பெண்
முகமிந்த முகமென்று
தமிழ் நெஞ்சார்க்கும் !
ஓரிணை இலாமுகம்
இம்முகம் என மாந்தர்
உலகம் தூக்கும் !
பேரறி முகம் கொண்ட
முகமிந்த முகமென்றோர்
பேச்சுக் கேட்கும் !
பாரினர் முகம் நாளும்
கோணைத் துறைமுகம்
பார்க்கும் நாடு !

மாண்புயர் தலைநகர்
மண்ணிடைத் தமிழீழ
மக்கள் மன்றம்
தூணெழில் வரிசையும்
விண்தொடும் மாடமும்
துலங்கநிற்கும்!
காண்பவர் கண்ணெலாம்
ஒளிபடப் புலிக்கொடி
காற்றி லாடும் !
பாணர்வாய் வாழ்த்திசை
பரவுமோர் தமிழாட்சி
படைத்த நாடு !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தன்னுரிமை ஒன்றே
உயிர்மூச்சாம் ! எல்லோர்க்கும்
தற்காப் புண்டாம் !
இன்னொரு வர் வாழ்வை
ஏய்க்காத படி சட்டம்
இருக்கும் நாடாம் !
முன்னுரிமை இங்கே
அறத்துக்காம் ! முறைகேடில்
லாத வாழ்வாம் !
நன்னிலமாய் மக்கள்
நலன்பேணும் தமிழாட்சி
நடக்கும் நாடு !

மக்களே மக்களைக்
காப்பாற்றும் மதில்வேலி
மக்கட்கெல்லாம்
மக்களே வழிகாட்டும்
கலங்கரை ! மக்களே
பெரும் பேராற்றல் !
மக்களே சட்டத்தின்
மூலவேர் ! மக்களே
ஆட்சி மன்றம் !
மக்களே எல்லாமும்
எனும் ஆட்சி முறைமண்ணில்
ஓம்பும் நாடு !



தலையீடில்லா வண்ணம்
ஆட்சிச் செயற்துறை
தனித்தியங்கும் !
விலைபேசும் கையூட்டும்
ஊழலும் இலையென்னும்
நிலை இருக்கும் !
மலைபோலும் அசையாத
நீதி தலைதூக்கி
மண்ணில் நிற்கும் !
நிலையான நிழலான
தமிழாட்சி நிலமீதில்
நிலவும் நாடு !

கணகாக்கும் இமையேபோல்
குஞ்சுகாக்கும் கோழி
இறக்கையே போல்
மண் காத்தல் இயல்பாகக்
கொண்டவர் தமிழீழ
மண்ணை ஆள்வார் !
விண்காப்போர் கடல்காப்போர்
மண்காப்போர் எனும்வீரர்
அழியா மார்பின்
புண்காத்து மகிழ்கொள்ளுப்
அரசொன்று புவிகாக்கும்
தமிழர் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

வெளிநாட்டார் தமிழீழ
மண்தொடல் விடாதாராய்
பிறர் நிலத்தைப்
பழி ஏற்றுத் தாம்தொடல்
சிறிதேனும் எண்ணாராய்
பாருக்கெல்லாம்
தெளிவூட்டும் ஒருகொள்கை
படைத்தெங்கும் புவிநட்பைத்
தேடிக் காக்கும்
வழிகாட்டுநர் தூயர்
நல்லாட்சி வல்லுநர்
வாழும் நாடு !

நாற்றிசை உலகெங்கும்
தமிழீழம் நலிந்தவர்
நட்பே கொள்ளும் !
ஆற்றலின் விடுதலை
இயக்கங்கள் ஏற்றவர்
அருகில் நிற்கும் !
சீற்றங்கொண்டெழும் பொல்லா
வல்லாட்சி யாளரைச்
சினந்து மோதும் !
தேற்றி அழும் நெஞ்சர்
புண்ணாற்றித் திசை முற்றுப
காப்போர் நாடு !



மண்வளம் கடல்வளம்
தமிழீழ மண் ஆள்வோர்
வளத்தின் வேராம் !
எண்ணரும் செல்வங்கள்
தமிழீழக் கடல் நீரின்
இருப்பில் உண்டாம் !
விண்ணின் நீர் வாங்கிப்பொன்
மணி கொட்டும் தமிழர்மண்
விளைச்சல் மண்ணாம் !
கண்ணென்றும் உயிரென்றும்
கருதிஇவ் விரு வளம்
காப்போர் நாடு !

எல்லோருக்கும் கல்வி
எல்லோருக்கும் தொழில்
என்னும் நீதி
எல்லோருக்கும் காணி
எல்லோருக்கும் மனை
என்னும் சொந்தம்
எல்லோருக்கும் இன்பம்
எல்லோருக்கும் எல்லாம்
என்னும் வாழ்க்கை
எல்லோருக்கும் மண்ணில்
இருக்கும் நல்லாட்சி ஒன்
றிருக்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

உள்ளவர் இல்லாதார்
என்றோ உயர்ந்தவர்
தாழ்ந்தோர் என்றோ
வல்லவர் மெலிந்தவர்
என்றோ முதல் வைப்போர்
உழைப்போர் என்றோ
வெள்ளையர் கருமையர்
என்றோ வேற்றுமையிலை
எனலாம் வையம்
நல்லவர் வாழும் மண்
என்றோத நாடாள்வோர்
நின்ற நாடு !

இன்பம் நிறைந்து செந்
தமிழர் இதழ்பூக்கும்
இனிய மண்ணில்
கண்படும் இடமெங்கும்
செந்தமிழ் தென்படும் !
மனம் களிக்கும் !
தன்பணி அனைத்திலும்
அரசு செந்தமிழையே!
பயன்படுத்தும் !
பண்பட வளர்ந்தசெந்
தமிழ்மொழி பாராளும்
தமிழர் நாடு !



இடப்பெயர் ஊர்ப்பெயர்
எடுத்தோதும் பலகையில்
தமிழிருக்கும் !
கடைப்பெயர் பணிமனைப்
பெயர்காட்டும் பலகையில்
தமிழ்கண் ஈர்க்கும் !
திடற்பெயர் பொழிற்பெயர்
தெரிவிக்கும் பலகையில்
தமிழ்த்தேன் பாயும் !
படைப்பெயர் பிறபெயர்ப்
பலகையில் தமிழ்மனம்
பறிக்கும் நாடு !

ஆட்சியின் அமைப்புநல்
விதிகள் மேலாணைகள்
அறிவித் தல்கள்
நாட்டினர் பெறும்ஆள்வோர்
கடிதங்கள் அரசினர்
சுற்றோலைகள்
காட்சிக்கு வரும்செயல்
துறையினர் கருத்தோதும்
விளம்பரங்கள்
கேட்டினை விளைவிக்கும்
பிறமொழிக் கலப்பின்றிக்
கிடைக்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நாடாள்வோர் தமிழ் காப்பின்
தமிழீழ நெஞ்செல்லாம்
தமிழ் நாடாதோ ?
பாடாத வாயெல்லாம்
தமிழிசை பாடாதோ ?
பழுத்த மண்ணின்
ஏடாள்வோர் தமிழ் நூல்கள்
எங்கணும் தமிழ்வெள்ளம்
பாய்ந்தோடாதோ ?
ஆடாத தமிழர் கால்
ஆடாதோ ? தமிழாடிக்
களிப்போர் நாடு !

பொன்னெழில் வயலோரம்
உழவர்தம் பொலிப் பாடல்
ஓசை கேட்கும் !
அன்னையர் தாலாட்டு
மழலையர் தொட்டிலின்
அருகில் கேட்கும் !
இன்னொரு புறம் தண்ணீர்
ஏரியில் ஏலேலோப்
பாடல் கேட்கும் !
கன்னலின் நற்றமிழ்
வசந்தன் பா காற்றெலாம்
கேட்கும் நாடு !



உடுக்கைத் தமிழ்ப்பாடல்
இசைபொங்க 'ஊம் ஊம்' என்
றுறுமி ஆர்க்கும் !
மிடுக் கோடும் ஊஞ்சற்பண்
பூம்பொழில் மீதெழும் !
கைகள் தாளம்
கொடுக்கக் கொடுக்கத்
தமிழ்க் கும்மிப் பாடலோர்
புறத்தே கொட்டும் !
அடுக் கடுக்காய் நாட்டுப்
பாடல் இடைக்கிடை
ஒலிக்கும் நாடு !

சர்க்கரைப் பற்றைத் தேன்
பற்றைச் சதைச் செங்
கரும்பின் பற்றை
முக்கனிப் பற்றைப்
பசும்பாலின் பற்றைஇப்
பற்றையெல்லாம்
அக்கரைப் பற்றைப் போய்
அணுகிப் பாடல் கேட்போர்
வெறுப்பர் அன்றோ ?
மக்களின் பற்றைத் தீந்
தமிழ்ப் பாடல் பற்றி
மயக்கும் நாடு!

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கொழுத்த கனிச்சுளை
போல் நலன் கொடுத்திடும்
எழுத்தே செய்வார் !
விழுத்த ஒண்ணாத நன்
நெறிகள் எழுத்தாக்கி
வெளியில் வைப்பார்!
புழுத்த உணர்வுகள்
ஒருபோதும் எழுத்தாதல்
பொறுக்க மாட்டார் !
பழுத்த நற்றமிழ் எழுத்
தாளர் பைந் தமிழ்வளர்த்
திருக்கும் நாடு !

வண்டமிழ் ஈழத்தில்
தமிழிசை வல்லுநர்
இசை வளர்ப்பார் !
பண்டையத் தமிழ்யாழைக்
குழலினைப் பருகுவார் !
தமிழின் தாளம்
கொண்டெழும் தோலிசைக்
கருவிகள் கொட்டுவார்!
தமிழீழத்தின்
எண்டிசை தேன்சுவை
கொண்ட நல் ஏழிசை
பொங்கும் நாடு !



நடமாடிப் பரதத்தின்
தமிழ்கார்ப்பார் நாட்டினர் !
மகுடி ஆடும்
இடமோடித் திரளுவார்
மக்கள் ! தலைதாங்கி
இருக்கும் வண்ணக்
குடமாடி வரஆடும்
கரகாட்டம் கூட்டமாய்ச்
சுவைப்பார் சில்லோர் !
வடமோடி தென்மோடி
எனும் தமிழ்க் கூத்தாடி
வாழ்வார் நாடு !

செந்தமிழ் ஈழத்தில்
திரைக்கலை ஓர்புறம்
செழித்திருக்கும் !
கந்தலாய்த் தமிழ்வாழ்வு
கிழிக்காத திரைப்படம்
கண்கள் பார்க்கும் !
சொந்தமண் ணின்பண்பை
இயல்புறத் திரைக்கலை
எடுத்துச் சொல்லும் !
சிந்தை மயக்கும் வெள்
ளித்திரை செந்தமிழ்
வளர்க்கும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

பொத்தல் உடைகட்டித்
தமிழ்ப்பெண் வருவதும்
காதலன் போய்
பத்துப்பேர் நடுவிலே
பாவை மேல் உராய்வதும்
பாடல் என்றோர்
கத்தலும் தமிழ்க்காதல்
என்னும் கொடுந்திரைக்
காட்சி முற்றும்
செத்துத் தொலைந்த
புதுத்திரை தமிழ்வாழ்வு
செய்யும் நாடு !

மண்ணெலாம் கலையெழில்
விழியெலாம் மனமெலாம்
பறிக்கும் கண்டீர் !
வண்ணத்தை இறைப்பவர்
ஓவியம் எண்ணத்தை
வாங்கும் கண்டீர் !
கிண்கிண் என்றெழும் சிற்பி
உளியின் பண் காற்றெலாம்
கேட்கும் கண்டீர் !
'எண்ணரும் கலைவாழும்
மண்கண்டீர்' எனமக்கள்
மகிழும் நாடு !



நற்றமிழ் ஈழமண்
அறிவியல் நலன்நிறை
நாடாய் நிற்கும் !
முற்றிலும் மாந்தர்தம்
வாழ்வுக்கே அறிவியல்
மூச்சு நல்கும் !
எற்றைக்கும் அழிவினை
எண்ணாத அறிவியல்
ஏடிருக்கும் !
கற்றவர் நாள்தொறும்
அறிவியல் நல்லாய்வு
காணும் நாடு !

விண்ணாய்வு மண்ணாய்வு
காற்றாய்வு விரிகடல்
நீரின் ஆய்வு
கண்ஈர்க்கும் ஒளிஆய்வு
காதுவீழ் ஒலிஆய்வு
வெப்ப ஆய்வு
மண்வாழும் உயிராய்வு
மனஆய்வு நோய் ஆய்வு
மருந்தின் ஆய்வு
நுண்ணரும் ஆய்வுகள்
இவ்வகை பலநூறு
வளரும் நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

நீள்வானின் நிலவினைப்
பாடுவான் நிலம் நின்றோர்
தமிழன்! வானின்
பால் நிலா ஏறி ஓர்
தமிழன் நிலம் பார்த்துக்
குறிப்பெடுப்பான்!
நாளெலாம் பொழுதெலாம்
அறிவியல் நலன் காத்துப்
புகழில் நாளும்
காலூன்றி நிற்பவர்
கற்பவர் நூலாளர்
கனிந்த நாடு!

துறைதொறும் துறைதொறும்
புகழ்கொண்டு புலவர்வாய்
தூக்கும் மண்ணாய்
இறைமையும் ஆட்சியும்
பல்துறைத் திறமையும்
பூக்கும் மண்ணாய்
மறைவிலா வெளிவானின்
பரிதிபோல் மண்ணெலாம்
நோக்கும் மண்ணாய்
நிறைவுகொண் டுலகெலாம்
காக்கும் மண்ணாய் மண்ணில்
நின்ற நாடு



என்றென்றும் தமிழீழம்
மகிழ்பொங்க விழாக்கோலம்
கொண்டிருக்கும்!
நின்றபல் வீதியும்
வாழைகள் பந்தல்கள்
நின்றிருக்கும்!
மன்றங்கள் வீரரைப்
புலவரை மகிழ்ந்தேற்றி
விழாஎடுக்கும்!
அன்றாடம் முழவுகள்
குழல்கள் நின்றெங்கணும்
ஆர்க்கும் நாடு!

தாயகத் தின் வேரில்
தம்முயிர் எருவாக்கித்
தலை சரித்த
தூயமா வீரர்நாள்
விழ வும் கை விலங்கினைத்
தூள் பொடித்த
தேயத்தின் விடுதலைப்
பொன்னாள் விழாவும் தேன்
விழாக்களாக
வாயவிழ் தமிழ்கொட்டி
ஆண்டாண்டு வாழ்த்துவார்
நின்ற நாடு !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

தென்னங் குருத்தோலை
கிழித்துத் தெருவெல்லாம்
அழகு செய்வார் !
இன்னுயிர் ஈந்தமா
வீரர் பட மெங்கும்
எழுதிவைப்பார் !
அன்னைமண் பற்றினை
மேடையில் நற்றமிழ்
கொண்டளப்பார் !
எந்நிலையிலும் புலிக்
கொடிவிழா எனும் விழா
நடக்கும் நாடு !

குத்து விளக்கு நின்
றெரியும் ! குளிர் நிறை
குடம் சிரிக்கும் !
கொத்தாய் மலர்தொங்கும்
பந்தல் இருக்கும் ! மின்
குமிழ்ப்பூ ஆடும் !
பத்துத் திசைகளும்
வளைவெழும் ! தோரணம்
கண் பறிக்கும் !
மத்தாப் பெழுந்துவான்
ஓவியம் தீட்டும் ! மண்
சிலிர்க்கும் நாடு !



ஆர்த்தெழும் முரசொலி
சங்கொலி ஓர்புறம்
ஆடல் வல்லார்
கூத்துகள் கும்மிகள்
ஓர்புறம் காற்றினில்
குழைந்து மூச்சை
ஈர்த்திடும் சந்தனம்
பூமணம் ஓர்புறம்
நாவில் இன்பம்
தோய்த்திடும் தேன்கனி
ஓர்புறம் எனவிழாத்
தோய்வார் நாடு !

நற்றமிழ் ஈழமண்
வளங்களும் நலங்களும்
செழித்த நாடு !
கொற்றம் சிறத்தலால்
புகழுறி மகிழுறித்
திளைத்த நாடு !
கற்றவர் அறத்தூய்மை
பெற்றவர் நிழல் நின்று
களித்த நாடு !
முற்றிப் பழுத்த செந்
தமிழ் வாழ்வு முழுநாளும்
தழைத்த நாடே !



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010





## நம்புங்கள் !

O

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும் !
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும் !

பாரில் தமிழ்மண்
வீரம் படைக்கும் !
பகைவன் ஓடும்
சேதி கிடைக்கும் !
போரில் வெற்றி
முரசம் முழங்கும் !
புலிகள் கழுத்தில்
மாலை குலுங்கும் !

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010

கூண்டுப் பறவை
சிறகு விரிக்கும் !
குனிந்த முகங்கள்
நிமிர்ந்து சிரிக்கும் !
மாண்ட வீரர்
கனவு பலிக்கும் !
மகிழ்ச்சிக் கடலில்
தமிழ்மண் குளிக்கும் !

வானம் நமது
கொடியை அழைக்கும் !
மாற்றார் முகத்தில்
நாணம் முளைக்கும் !
மானம் நமக்கோர்
மகுடம் வழங்கும் !
மண்ணில் நமது
பெயரும் விளங்கும் !

நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும் !
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும் !

○

தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு மிகவும் பிடித்த கவிஞரின் பாடல்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010



இயந்திரத் துப்பாக்கியை ஏந்திய பிறகும்
எழுதுகோலை எறிந்துவிட முடியாது என்பதற்கான
இரத்த சாட்சியே இந்தப் புத்தகம்

இது ஒரு

விடுதலைக் குயில்கள்

வெளியீடு

FREE E-BOOK (www.thamizham.net) TM1450 / May 2010